...நகர சபை, யாழ்ப்பாணம்,

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 14 செவ்வாய்க்கிழமை (27.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 129

# ஜி-15 நாடுகளின் தலைமைப் பதவி

# இலங்கைக்கு மாறும் வாய்ப்பு!

## ஜனாதிபதி மகிந்த பொறுப்பேற்பார்

(கொழும்பு)

ஜி-15 நாடுகளின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்குக் கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மே 17 ஆம் திகதி நடைபெறும் மாநாட்டின் போது இந்தத் தலைமைப் பதவி வழங்கப்படவுள்ளது. *(18 ஆம் பக்கம் பார்க்க)*



16-வது சார்க் உச்சி மாநாடு பூட்டான் தலைநகரான திம்புவில் ஆரம்பமாகின்றது. இம் மாநாட்டில் கலந்து கொள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கைத் தூதுக் குழுவினர் நேற்றும் பூட்டான் சென்றடைந்தனர். பூட்டான் சென்றடைந்த ஜனாதிபதியை அந்நாட்டுப் பிரதமர் வரவேற்றார்.

# இயல்பு வாழ்க்கை உருவாகுவதற்கான சூழல் நாட்டில் ஏற்பட்டு வருகின்றது

## பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

30 வருட கால யுத்தம் முடிபடைந்ததையடுத்துப் பொதுமக்கள் எதிர்பார்க்கும் இயல்பு வாழ்க்கைக்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கேற்ற சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படுவதாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.பயங்கரவாதம் காரணமாக சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகரித்ததாகவும் பயங்கரவாதத்தின் பக்க விளைவாக இந்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆயுதங்கள் சமூகத்தில் தாராளமாகப் புழங்கியமை, பாதாள உலகக் கோஷ்டியினரின் செயற்பாடு அதிகரித்தமை, போதைப் பொருள் பாவனை இவை அனைத்தும் பயங்கரவாத நடவடிக்கையின் விளைவாகவே இடம் பெற்று வந்ததாகவும் இதனைப் பொலிஸ் அதிகாரிகள் நன்கு அறிந்திருப்பதாகவும் பாதுகாப்புச் செயலர் தெரிவித்தார்.

பயங்கரவாதம் ஒடுக்கப்பட்ட பின்னர் இத்தகைய சமூக விரோதச் செயற்பாடுகளை ஒழிக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.(ச-3)

# 75 இலங்கை அகதிகள் மலேசியாவில் கைது

(கொழும்பு)

இலங்கை அகதிகள் 75 பேர் மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்கும் நோக்கில் குறித்த இலங்கையர்கள் படகு மூலம் பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த படகு சேதமடைந்ததால் அகதிகள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் 75 இலங்கை அகதிகளையும் மலேசிய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் மீட்டுத் தடுப்புக் *(18 ஆம் பக்கம் பார்க்க)*

# பெற்றோலிய வளத்துறை அமைச்சின் கொடுப்பனவுகள் இடைநிறுத்தம்!

(கொழும்பு)

பெற்றோலிய வளத்துறை அமைச்சினால் வழங்கப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளையும் புதிய பெற்றோலியவளத்துறை அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் சுசில்பிரேமஜயந்த இடைநிறுத்தி வைத்துள்ளார்.

அனைத்துக் கொடுப்பனவுகளையும் கணக்காய்வு செய்வதற்கான நடவடிக்கையையும் அவர் ஆரம்பித்துள்ளார்.

தற்போதிருக்கும் நிர்வாகத்தில் குறைகள் காணப்படுவதாகவும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கை மின்சார சபை 55 பில்லியன் ரூபாய் வழங்க வேண்டியிருப்பதாகவும் சுசில் பிரேமஜயந்த கூறினார். (ச-5)

# விடுதலைப்புலிகள் ஏழு பேர் நெதர்லாந்தில் வைத்து கைது

(கொழும்பு)

நெதர்லாந்து நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் அமைப்புக் குறித்து நடத்தப்பட்ட கவனமான மற்றும் விரிவான புலனாய்வுகளையடுத்து அந்த நாட்டின் தேசிய குற்றப்புலனாய்வு சேவைகள் அமைப்பினர் சந்தேகத்திற்குரிய ஏழு பேரை கைது செய்துள்ளனர்.

இது தவிர 16 வீடுகள் மற்றும் வியாபார நிறுவனங்களிலும் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதன்போது கணனிகள், காகித ஆவணங்கள், தொலைபேசிகள், புகைப்படங்கள், டி.வி.டிகள் ஆகியவை சோதனைக்குள்ளாகின.

மேலும் இந் நடவடிக்கையின்போது 40 ஆயிரம் யூரோக்கள் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பை ஐரோப்பிய *(18 ஆம் பக்கம் பார்க்க)*

# 'சிறுமி கடத்தப்பட்டார்' என்ற வதந்தியால் பாடசாலைகளை முற்றுகையிட்ட பெற்றோர்

## வலிகாமத்தில் நேற்றுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பகுதியில் வெள்ளை வான் ஒன்றில் பாடசாலைச் சிறுமி ஒருவர் கடத்தப்பட்டதாக வெளியான வதந்தியை அடுத்து வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலைகளை நேற்றுப் பெற்றோர் முற்றுகையிட்டதுடன் தமது பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, சுழிபுரத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் சிறுமி ஒருத்தியை வெள்ளை வானில் வந்த சிலர் கடத்திச் சென்றதாக நேற்றுக் காலை வதந்தி ஒன்று வெளியானது.

இதனையடுத்துச் சுழிபுரம் சம்பவம் உட்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர் அப் பகுதியிலுள்ள பாடசாலைகளை முற்றுகையிட்டனர். சிலர் தமது பிள்ளைகளை வீட்டிற்கும் அழைத்துச் சென்றனர்.

சிறுமி கடத்தப்பட்டதாக வெளியான தகவல் குறித்து இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அப் பகுதிகளில் குவிக்கப்பட்ட இராணுவத்தினர் ஹயஸ் மற்றும் ஆட்டோக்களை வழிமறித்து தீவிர சோதனைகளை மேற்கொண்டனர். பாடசாலைகளைச் சுற்றியும் பாது *(18 ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





நேற்று முன்தினம் காலமான பத்திரிகையாளர் செ.ரூபனின் இறுதி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலைய இயக்குநரும் முன்னாள் துணைவேந்தருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை அஞ்சலி செலுத்துவதையும், அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள ரூபனின் பூதவுடலையும் இறுதி ஊர்வலத்தையும் படங்களில்காண லாம்.

# இந்திய திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக் கூடாது

## தென்னிந்திய நடிகர் சங்கம் தந்தி

(சென்னை)

இலங்கையில் இந்திய திரைப்பட விழாவை நடத்தக்கூடாது என்று நடிகர் அமிதாப்பச்சனுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் அவசர தந்தி அனுப்பியுள்ளது.

இலங்கை தலைநகர் கொழும்பில் வரும் யூன் மாதம் சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெறுகிறது. இந்த விழாவுக்கு பாலிவூட் நடிகர் அமிதாப்பச்சன் விளம்பர தூதராக இருக்கிறார்.

இதற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ நெடுமாறன் போன்ற தமிழக தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும் இயக்குநர் சீமானின் நாம் தமிழர் இயக்கத்தினர் அமிதாப்பச்சன் வீட்டு முன் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினர்.

ஆயிரக்கணக்கான தமிழர்களின் மரணத்திற்கு காரணமான ராஜபக்ஷே அரசாங்கம் தலைநகர் கொழும்பில் நடத்தும் சர்வதேச திரைப்பட விழாவில் தமிழ் திரைப்படத்துறையைச்சேர்ந்த எவரும் கலந்து கொள்ளக்கூடாது. அத்தோடு அமிதாப்பச்சன் தனது நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கின்றனர்.

மேலும் அமிதாப் அழைப்பை தமிழக முன்னணி நட்சத்திரங்கள் அனைவரும் புறக்கணித்துவிட்டனர்.

இந்நிலையில் இலங்கையில் இந்தியத் திரைப்பட விழாவை நடத்தக் கூடாது என்று நடிகர் அமிதாப்பச்சனுக்கு தென்னிந்திய நடிகர் சங்கம் அவசர தந்தி அனுப்பியுள்ளது. அதில் தமிழ் மக்கள் உணர்வுகளை மதித்து திரைப்பட விழாவை கைவிட வேண்டும் என்றும் திரைப்பட விழாவை இலங்கையில் நடத்துவது எங்களுக்கு அதிர்ச்சி தருகிறது என்றும் தென்னிந்திய நடிகர் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## தாக்குதலில் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்குப்பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் நேற்றிரவு 9 மணியளவில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் இதேஇடத்தைச் சேர்ந்த கே.குணநாயகம் (வயது 53) அவரது மனைவி கே.கமலாதேவி (வயது 48) பிள்ளைகளான கே.லிங்கேஸ் (வயது 19), கே.ரவிராஜ் (வயது 08) ஆகிய நால்வருமே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஏ)




புங்குடுதீவு குறிகாட்டுவான் இறங்குதுறை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் சோலர் மூலம் வெளிச்சம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடுவதையும் சோலர் மூலம் இயங்கும்மின் விளக்குகளின் விபரங்கள் அடங்கிய பட்டியலை கடற்படை அதிகாரிகளிடம்கையளிப்பதையும் படங்களில்காணலாம்.

## பிரகீத் ஹெக்நேலியகொடவின் ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியகொடவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோரி அவரது மனைவி சந்தியா ஹெக்நேலியகொட தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை இன்று உயர் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஹெக் நேலியகொட கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி காணாமல் போனார். அவருக்கு என்ன நேர்ந்தது என்ற தகவல் கள் இதுவரை வெளியாகவில்லை.

இந்நிலையில் தனது கணவர் இடம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு கோரிசந்தியா இந்த ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தார். இவ் வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (ச-5)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம் யாழ்.வர்த்தக தொழிற்துறை வேளான் மகளிர் ஒன்றியத்துடன் இணைந்து GAMA அபாக்காஸ் நிறுவனத்தின் ஊடாக யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கும் விசேட பயிற்சியில் நாளை வேலணை, நெடுந்தீவு பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கானபயிற்சி 8.30இல் இருந்து 12.30 மணி வரை வேலணை சரஸ்வதி வித்தியாலய மண்டபத்திலும் ஊர்காவற்றுறை காரை நகர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி 1.30 தொடக்கும் 5.30 மணி வரை ஊர்காவற்றுறை சென் மேரிஸ், மகளிர் வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது. (ச)

## பாடசாலைச் சிறுவர்களை அழைத்துச் செல்வோரின் விபரங்கள் அதிபர்களினால் பதியப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சிறுவர்களை அழைத்துச் செல்வோர் தொடர்பான பூரண விபரங்கள் பாடசாலை அதிபர்களினால் கோரப்படுகின்றன.

இதற்கென விசேட படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு பெற்றோரைக் கொண்டு பூரணப்படுத்தி பெறப்படுகின்றன.

அப்படிவத்தில் பெயர் குறிப்பிட்டோர் மாத்திரமே பாடசாலைச் சிறுவர்களை அழைத்துச் செல்ல முடியும் எனவும் பெயர் குறிப்பிடாத உறவினர்கள் எவரும் அம்மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் பெற்றோரின் சம்மதக்கடிதத்துடன் வரவேண்டும் எனவும் அதிபர்களினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அன்மைக்காலங்களில் யாழ். குடா நாட்டில் பரவலாக இடம் பெற்றுவரும் கடத்தல் முயற்சிகளை அடுத்து இச் செயற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


**முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

இப் பரீட்சை 8ஆம் திகதி நடைபெறவுள்ளது.
வகுப்பு ஆரம்பம்: புதன் (28.04.2010) காலை 9.00 மணி
புதன் 9.00 – 3.00மணிவரை
சனி, ஞாயிறு 1.00–5.00 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை எதிரில்)
(சு-161)

**அலுமாரிகள் விற்பனைக்கு**

கடைத் தேவைகளுக்குப் பாவிக்கக் கூடிய நல்ல நிலையில் உள்ள மரத்திலான அலுமாரிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 222 2063
இல.41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சு-162)

**காணி விற்பனைக்கு**

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி றோட்டில் நல்ல தண்ணீர்த் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. (19 பரப்பு)
தொடர்பு இல: 0777565826
0112945474
(1265)

**காணி விற்பனைக்கு**

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு; சுண்ணாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் கதைக்கலாம்.
Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770

**ஸ்ரீராம ஜெயம்**

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கைரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் மிகத்துல்லியமாகப் பார்க்கப்படும். T.P.:0778752163
414, சன்ஜெயா உணவகம், மேல்மாடி அறை இல.[illegible] ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(1249)

**முகாமைத்துவப் பயிற்சி**

யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ள சர்வதேச INNOVAGE நிறுவனத்திற்கு Supervisor, Assistant Manager, Manager ஆகிய பதவிகளுக்கு ஆண்கள் தேவை. வயதெல்லை 18–30 அனுபவம் தேவையில்லை. கல்வித்தகைமை–G.C.E.O/L
தொடர்புகளுக்கு: [illegible]
(1266)

**Computer Mega Sale**
**கடைசியும் இறுதி நாளும்**

இறுதி நாள் விசேட விலைக்கழிவு விற்பனை PIV கணனிகள் 9,500 ரூபாயிலிருந்து. யாழ்–மத்திய கல்லூரியில் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை.
மேலதிக தொடர்புக்கு: 0715 680 707
0718 570 609
(1271)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இன்பப் புதையல்

வெளிநாட்டிலிருந்து ஒருத்தர் நம் நாட்டுக்கு வந்திருந்தார். அவரை இங்குள்ள ஒருத்தர் மிகவும் அன்பாக வரவேற்று உபசரித்தரர்.

அவர் ஒரு தோடம்பழத்தை இவரிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார். இவர் அதை வாங்கி அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்து விட்டு கடித்துப் பார்த்தார். கசப்பாக இருந்தது. தூக்கி எறிந்து விட்டார். ஏன் அதைத் தூக்கி எறிந்து விட்டீர்கள்? என்று கேட்டார் அவர்.

"கசக்கிறது .அதை எப்படிச் சாப்பிடுவது?" என்றார் இவர்.

அதை அப்படிச் சாப்பிடக்கூடாது. மேலேயுள்ள தோலை எடுத்து எறிந்து விட வேண்டும். இனிப்பான பகுதி உள்ளே இருக்கிறது என்று விபரம் சொன்னார் அவர்.

இந்தக் கதையைச் சொன்னார் ஒரு யோகி.

அவர் என்ன சொல்கிறார் என்றால்,

"வாழ்வின் வெளிப்பக்கத்தில் இருந்து கொண்டிருந்தால் கசப்பான பிரச்சினைகளையே சந்திக்க வேண்டியிருக்கும். உள்பக்கத்துக்குப் போக வேண்டும். அப்பொழுது தான் அங்கே இருக்கும் இனிப்பை உணர முடியும் என்கிறார்.

நாமெல்லாம் இரண்டு வகையான வாழ்க்கையை வாழ் கிறோமாம். மேலோட்டமான – வெளிப்படையாகவுள்ள வாழ் வென்பது ஒன்று .உள்ளார்ந்த வாழ்வென்பது ஒன்று.

வாழ்வின் வெளிப்பக்கம் பிரச்சினைகளும் சவால்களும் நிறைந்தது. உள்புறம் அமைதியாக உள்ளது.

இந்த உள்பக்கத்தில் தான் மகிழ்ச்சியான வாழ்வுக்குத் தேவையான புதையல் இருக்கிறதாம்.

நாம் அந்த உள்பக்கத்துக்குப் போய் அங்கேயுள்ள ஊக்க சக்தியையும் (Energy) புத்திசாலித் தனத்தையும் (Intelligence) பொறுக்கி எடுத்து அன்றாட வாழ்க்கையில் உபயோகப்படுத்த வேண்டும். மனம் ஒரு குரங்கு மாதிரி அலைகிறது என்கிறோம். அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்கிறோம். மனம் அலைவது உண்மைதான்.

தேனீ எதற்காக அலைகிறது? தேனுக்காக அலைகிறது. அது மாதிரித்தான் மனமும் அலைகிறது. மகிழ்ச்சி –சாந்தி இவற்றைத் தேடி ! மனத்தை உள்பக்கமாக அலைய விடவேண்டும்.

மகிழ்ச்சியான வாழ்வுக்கு என்ன தேவை என்பதையும் அந்த யோகி சொல்கிறார். ஊக்கம், புத்திசாலித்தனம், அமைதி, சாந்தம் இவையெல்லாம் நம்மிடமே, நமக்குள்ளேயே இருக்கிறது. அதனால் தான் சொர்க்கம் நமக்குள்ளேயே இருக்கிறது என்று சொல்வது.

புதையலை நமக்குள்ளேயே வைத்துக்கொண்டு அதைத் தேடிப் புலம்பிக் கொண்டிருப்பது மிகப்பெரிய வேடிக்கை என்றார் அவர்.

இதையெல்லாம் கேட்கும் போது உங்களில் பலருக்கு கோபம் கூட வரலாம்.

என்ன சேர் இது? இன்று ஒரு தகவலில் ஏதாவது உபயோகமாக சொல்வீர்கள் என்று பார்த்தால்... என்னமோ தத்துவத்தை பேசிக்கொண்டிருக்கிறீர்களே என்று நினைக்கலாம். இதுவும் உபயோகமான விடயம் தான்.

நாம் தியானம் செய்வதில்லை என்றால் கூட மனதில் அழுத்தமோ, இறுக்கமோ இல்லாமல் எப்பொழுதும் சந்தோசமாக இருக்கப் பழகிக் கொண்டால் போதும். ஏனெனில் மன இறுக்கத்தினாலேயே ஏகப்பட்ட நோய்கள்வருகிறதாம். பெரும்பாலான உடம்புக் கோளாறுகளுக்கு வாழ்க்கையின் விரக்தியாலும் தோல்விகளாலும் ஏற்படும் மன இறுக்கம் தான் காரணம் என்பது மருத்துவ ஆராய்ச்சி முடிவு.

"நான் இறுக்கம் இல்லாமல் இருப்பதற்குத் தான் பிரியப் படுகிறேன். இந்த சமூகம் அதற்கு இடம் கொடுக்கவில்லையே என்ன செய்வது?" என்பது சில பேருடைய கேள்வி.

இந்த சமூகத்தை சரி செய்ய வேண்டியதும் நாம் தான். நம்மைச் சரி செய்து கொள்ள வேண்டியதும் நாம் தான். நான் சரியாக இருக்கிறேன். சமூகம் சரியாக இல்லை என்று அதை ஒதுக்கிப் பிரயோசனம் இல்லை.

ஒரு குடும்பஸ்தர் இருந்தார். அவர் மனதில் எப்பொழுதும் டென்ஷன் இல்லாமல் இருக்கப் பழகிக் கொண்டார்.

அவர் சொல்லுவார் :

நான் ஒன்றும் ஆழ்நிலை தியானமெல்லாம் செய்யவில்லை. இருந்தாலும் என் மனம் எப்பொழுதும் அமைதியாகத் தான் இருக்கிறது. இவ்வளவுக்கும் எங்கள் வீட்டில் அம்மாவுக்கும் சம்சாரத்திற்கும் இடையில் சண்டை நடந்து கொண்டு தான் இருக்கும்" என்பார்.

"அதுசரி... உங்கள் அம்மா ஒரு பக்கம் சம்சாரம் ஒருபக்கம் என்றால் நீங்கள் யார் பக்கம் இருப்பீர்கள்?" என்று கேட்டார் ஒருத்தர்.

"அந்தச் சமயம் நான் வீட்டுக்கு வெளிப்பக்கம் இருப்பேன்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும், வழிகாட்டலும் ஆலோசனையும், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கான சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் பதவிக் கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I, அல்லது 2-I இனைச் சேர்ந்த பின்வரும் தகைமைக ளைக் கொண்ட யாழ். வலயத்திற் குட்பட்ட ஆசிரியர்கள் விண்ணப் பிக்க முடியும்.

✸ குறிப்பிட்ட பாடத்தினை (அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை) ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடங்களில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவராகவும் இருத்தல் வேண்டும். அல்லது,

✸ விண்ணப்பிக்கும் பாடத் துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவு திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடங்களுக்கு குறையாது தரம் 6 தொடக்கம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று முப்பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர் வரும் மே மாதம் 3ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப் படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

03.05.2010 க்குப் பின்னராக அனுப்பி வைக்கப்படும் விண்ணப் பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட் டாது.

மேலதிக விபரங்களை யாழ். வலயக்கல்வி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித் துள்ளார். (2-4)

# புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சி

யாழ். போதனா வைத்தியசாலை யின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு மருதனார்மடம் புற்றுநோய் காப்பகமும் இணைந்து நடத்தும் புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சி இன்று செவ்வாய்க் கிழமை யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

புற்றுநோய் தொடர்பான போதிய விழிப்புணர்வற்று நோய் பரவிய பின்பே அநேக நோயாளிகள் சிகிச் சைக்கு வருவதாகவும் இதனைத் தடுக்கும் நோக்கிலேயே இக்கண் காட்சி நடைபெறவுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை யின் புற்றுநோய் சிகிச்சைப் பிரி வினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் இக் கண்காட்சிகள் யாழ். நகரின் பல இடங்களிலும் வாரத்துக்கொரு முறை நடாத்த திட்டமிட்டுள்ளதாகவும் இந்நோய் தொடர்பான விழிப்பணர்வு சுவ ரொட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ள தாக மேலும் தெரிவித்தனர். (4)

# கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் 5ஆவது கிளை இன்று யாழில் திறந்து வைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது தனது 5 ஆவது கிளையினை யாழ்ப்பாணத்தில் 398/1, ஆஸ்பத்திரி வீதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு பங்குப் பரிவர் தனையின் முதல்வர் எ.என். பொன் சேகா தலைமையில் திறந்து வைக் கப்படவுள்ளது.

இக்கிளையில் பங்குப் பரிவர் தனைக்கு வசதியளிப்பதற்காக 6 பங்குத்தரகர்நிறுவனங்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையுடன் இணைந்து யாழ்ப்பாண மக்களுக்குச் சேவையாற்றவுள்ளன.

தற்போதைய சூழலில் யாழ்ப் பாண மக்களின் முதலீட்டிற்கான மிகச் சிறந்த வாய்ப்பாகப் பங்குக ளில் முதலீடு அமைவதனால் இவ் விடயம் தொடர்பான மேலதிக விப ரங்களைப் பெறக் கொழும்பு பங் குப் பரிவர்த்தனை யாழ்ப்பாணக் கிளைக்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம் என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (6-4)

# இராசி பலன்


27-04-2010
(சித்திரை 14, செவ்வாய்க்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 8.02 மணிவரை
அத்தம் காலை 6.18 மணிவரை
சித்திரை பின்னிரவு - 5.24 மணிவரை
இராகுகாலம் 2.59-4.29 மணிவரை
சுபநேரம் 10.29-11.59 மணிவரை
நீர்வேலி கந்தசாமி கோயில், வல்வெட்டித்துறை முத்துமாரி, கைதடி வீரகத்திப் பிள்ளையார், நல்லூர் கைலாச பிள்ளையார், மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார், சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் தேர். சித்திரைச் சித்திரை.

| | |
|---|---|
| மேடம் | செல்வாக்கு, தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம், பொருட் சேர்க்கை. |
| இடபம் | அதிகபிரயாசை, சிறுவியாதி, தாழ்ந்த சுபாவம், பிறருக்கு உதவி செய்தல். |
| மிதுனம் | அபூர்வ சந்திப்பு, காரிய அனுகூலம், மனச்சஞ்சலம், நல்ல செய்தி. |
| கடகம் | கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை, சகோதரர் உதவி, பிரயாண நன்மை. |
| சிங்கம் | குடும்பக்கவலை, அதிக செலவு, வீண்விவாதம், காரிய தாமதம். |
| கன்னி | பெரியோர் சந்திப்பு, போசன சுகம், எதிர்பாராத மனஸ்தாபம், தெய்வ சிந்தை. |
| துலாம் | பிரயாண அலைச்சல், மனச் சோர்வு, சுபசெலவு, தந்தை வழி உறவு. |
| விருச்சிகம் | தொழில் நன்மை, உறவினர் வருகை, காரிய சித்தி, பணவரு வாய். |
| தனுசு | உற்சாகம், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, நல்ல தகவல். |
| மகரம் | அதிக பிரயாசை, திடீர் பயணம், முயற்சி தாமதம், தனவிரயம். |
| கும்பம் | போசன சுகம், அச்சமான நிலை, தொழில் நன்மை, முயற்சி தாமதம். |
| மீனம் | தெய்வ சிந்தை, தேகநலன், நல்ல வரவேற்பு, பொருள் சேர்க்கை. |

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | கல்வியங்காடு ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 70 |
| தக்காளி | 50 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 60 |
| கரட் | 100 | 120 | 90 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 120 | 70 |
| லீக்ஸ் | 70 | 80 | 90 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 90 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 150 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 30 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை செல்வாநாயகத்தின் 33ஆவது நினைவுநாள் அஞ்சலி நிகழ்வு தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.இந்நிகழ்வில் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம், ஊடகச் செயலாளர் கஜன் ஆகியோர் தந்தை செல்வநாயகத்தின் நினைவுச் சிலைக்கு மாலை அணிவிப்பதையும், அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

## ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மீது விசேட பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது

### ஊடக தகவல் அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

எதிர்வரும் சுபீட்சம் நிறைந்த தசாப்த காலத்தில் ஊடக நிறுவனங்கள் ஊடகவியலாளர் மீது விசேட பணி ஒப்படைக்கப்பட்டிருப்பதாக ஊடக தகவல் அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பி. கனேகல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊடக நிறுவனங்களும் தனியார் ஊடக நிறுவனங்களும் இந்த பொறுப்புக்களை தட்டிக்களிக்க முடியாது. இலங்கை மிக உயர்ந்த தரத்தில் ஊடக சுதந்திரத்தை பேணும் ஒரு நாடாகவுள்ளது. ஊடகவியலாளர்களுக்கு பூரண சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

இதுவே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும்.மகிந்த சிந்தனை எதிர்கால நோக்குத் திட்டத்தின் பிரகாரம் தேவையான திருத்தங்களுடன் ஊடகம் நிர்வகிக்கப்படும் என கூறினார். (6-4)

## தமிழ் இளைஞர்கள் தேசிய அரசியலில் ஈடுபட வேண்டும் -கனேடிய அமைச்சர்

(கொழும்பு)

தமிழ் இளைஞர்கள் தேசிய அரசியலில் ஈடுபட வேண்டும் இவ்வாறு மனித உரிமைகளிற்கான கனேடிய மையத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை ரொறன்ரோ நகர மண்டபத்தில் இடம்பெற்ற அரசியல் செயற்பாட்டாளர்கள், வேட்பாளர்கள் மற்றும் தொண்டர்களிற்கான கருத்தரங்கில் உரையாற்றய கனேடிய குடிவரவு அமைச்சர் தெரிவித்தார்.

பல்வேறு கட்சிகளையும் அமைப்புக்களையும் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் மத்திய மற்றும் மாகாண அமைச்சர்கள் என சுமார் 200 பேர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உரையாற்றிய கனடியக் குடிவரவு மற்றும் பல் கலாசார அமைச்சர் ஜேசன் கெனி மேற்கண்டவாறு தெரிவித்ததோடு,

இவ்வாறு இளம் வயதில் புலம் பெயர்ந்த சமூகத்தினர் அரசியலில் ஈடுபடும் போது ஜனநாயக வழிமுறைகளில் பிரச்சினைகளிற்கான தீர்வுகளைக் காண்பதற்கான வாய்ப்புக்களை பெறுகிறார்கள் என்றும், அதுபோலவே கருத்து மோதல்களிற்கு கருத்துக்களாலேயே பதிலளிக்கும் பக்குவத் தன்மை பெறுகிறார்கள்.

ஜனநாயக மரபுகளின்படி கருத்துப் பகிர்வில் ஈடுபடும் சுதந்திரம் கனடியர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டெனவும் அவ்வாறான கருத்துப் பரிமாற்றத்தில் சகலரையும் ஈடுபடுத்திச் செல்வதே சிறந்த ஜனநாயகம்.

மற்றையவர்களின் கருத்து ஒருவருக்கு பிடிக்காவிட்டால் அதற்கான பதில் கருத்தை அவர் வழங்குவதே ஆரோக்கியமான அரசியல் என்றும் அதை விடுத்து எதிர்க் கருத்துக் தெரிவிப்பவரை மிரட்டுதல் அல்லது மறைமுகமான பயமுறுத்தலிற்கு ஆட்படுத்தல் என்பன ஆரோக்கியமான ஒரு சமுதாயக் கட்டமைப்பை ஏற்படுத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

மனித உரிமைகளை மையப் படுத்தி ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு இளைஞர்களை அரசியல் மயமாக்கும் ஒரு சிறந்த ஊடகமாக அமையும் எனவும் அவர்களை வழிநடத்தும் எனவும் தான் நம்புவதாகவும் மேலும் தெரிவித்தார். (2-6)

## அபிவிருத்தி தொடர்பாக மக்களின் எதிர்பார்ப்புக்களை உணர்ந்து கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது - டலஸ்

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள புதிய உறுப்பினர்கள் நாட்டின் சார்பில் பூர்த்தி செய்ய வேண்டிய தேசிய பொறுப்பொன்றை கொண்டிருக்கின்றார்கள் என்று டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி தொடர்பாக மக்களின் எதிர் பார்ப்புகளை நெருங்கி உணர்ந்து கொள்ளும் காலம் நெருங்கி விட்டதாகவும் ஜனாதிபதி இது தொடர்பாக கிரமமான திட்டமொன்றை அமுல் செய்து வருவதாகவும் குறிப்பிட்டார். (6-4)

## வீட்டு மின்னிணைப்பு பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் வீட்டு மின் இணைப்பு பயிற்சி நெறிக்கு (NVQ சான்றிதழ்) யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்போர் க.பொ.த.(சா/த) வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் NAITA, இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மே மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6)

## பல்வேறு கட்சிகளில் போட்டியிட்டோரின் உறவினர் -சகோதரர்கள் பலர் தெரிவாகினர்

பொதுத் தேர்தலில் பல்வேறு அரசியல் கட்சிகளில் போட்டியிட்ட வேட்பாளர்களின் உறவினர்கள் மற்றும் சகோதரர்கள் பலர் இம்முறை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான சமல் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ மற்றும் மகன் நாமல் ராஜபக்ஷ மற்றும் உறவுமுறை சகோதரியான நிரூபமா ராஜபக்ஷ ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

அத்தோடு முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தேசிய பட்டியல் எம்.பியாக அமைச்சர் பதவி வகிப்பதோடு அவரது மகன் விதுர விக்ரமநாயக்கவும் களுத்துறை மாவட்ட எம்.பியாக ஆளும் தரப்பில் தெரிவாகியுள்ளார்.

பிரதமர் டி.எம். ஜயரத்ன தேசிய பட்டியலில் நியமனம் பெற்றுள்ளதோடு அவரது மருமகன் துமிந்த திஸாநாயக்க அநுராதபுர மாவட்ட எம்.பியாகத் தெரிவாகியுள்ளார். கலாநிதி சரத் அமுனுகம மற்றும் அவரது உறவு முறை மகனான அமுனுகமவும் தெரிவாகியுள்ளனர். தினேஷ் குணவர்த்தன, கீதாஞ்சன குணவர்தன சகோதரர்கள் மற்றும் மகிந்த யாபா அபேவர்தன, லக்ஷ்மன் யாபா அபேவர்தன உறவு முறை சகோதரர்களும் தெரிவாகியுள்ளனர்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு மாவட்டத்தில் வெற்றி பெற்ற நிலையில் உறவு முறை சகோதரரான ருவன் விஜேவர்தன கம்பஹா மாவட்டத்தில் வெற்றியை பெற்றுள்ளார். கரு ஜெயசூரியா மற்றும் அவரது மருமகன் நவீன் திசாநாயக்காவும் வெற்றி பெற்றுள்ளனர். ஜனநாயக தேசிய முன்னணியில் போட்டியிட்டு அர்ஜுன் ரணதுங்க வெற்றி பெற்றுள்ளதோடு சகோதரர் ருவன் ரணதுங்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

ஐ.தே. கட்சியில் மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட வசந்த அலுவிஹார வெற்றி பெற்றுள்ளதோடு சகோதரர் ரஞ்சித் அலுவிஹார தோல்வியைத் தழுவியுள்ளார்.

ஐ.தே.கட்சியின் ருக்மன் சேனாநாயக்க தேசிய பட்டியல் எம்.பி. பதவியை இழந்த போது அவரது உறவு முறை மகனான வசந்த சேனாநாயக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு தெரிவானார்.

முன்னாள் சபாநாயகர் லொக்கு பண்டார நாடாளுமன்ற அங்கத்துவத்தை இழந்த நிலையில் அவரது மகன் உதித லொக்கு பண்டார ஆளும் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற விமல் வீரவன்சவின் சகோதரரான சரத் வீரவன்ச தோல்வியைத் தழுவினார்.

அனுருத்த ரத்வத்தைக்கு தேசியப் பட்டியலில் இடம் வழங்கப்படாத போதிலும் மகனான லொஹான் ரத்வத்தை கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

ஆளும் தரப்பில் சரத் கோங்காகே தேசியப் பட்டியலில் இடத்தை இழந்ததோடு அவரது மனைவியான ஐ.தே.கட்சியில் போட்டியிட்ட சாந்தினி கோங்காகே தோல்வியைத் தழுவினார். ஐ.தே. கட்சியில் பதுளையில் போட்டியிட்ட ரவீந்திர சமரவீர, உபாலி சமரவீர சகோதரர்கள் இருவரும் தோல்வியைத் தழுவிக் கொண்டனர்.

ஐ.தே.க.கட்சியில் போட்டியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரபா கணேசன் கொழும்பு மாவட்டத்தில் வெற்றியீட்டிய போதும் அவரது சகோதரரும் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் கண்டி மாவட்டத்தில் தோல்வியைத் தழுவினார். ஜீவன் குமாரதுங்க வெற்றி பெற்றதோடு அவ் ரது உறவு முறை மகனான ரஞ்சன் ராமநாயக்க இருவரும் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர். (2-6)

## சலாகை முறிந்ததில் தொழிலாளி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சலாகை கட்டி மேசன் வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளார்.


நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த சி. செல்வராசா (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார்.

குறித்த நபர் வீடொன்றின் மேல்மாடியில் 10 அடி உயரத்தில் கட்டப்பட்டிருந்த சலாகை முறிந்து வீழ்ந்து கை உடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









ஆங்கில கவிஞரும் நாடக ஆசிரியருமான வில்லியம்ஸ் சேக்ஸ்பியரின் பிறப்பு மற்றும் இறப்பினை நினைவுகூரும் வகையில் யாழ். பல்கலைக்கழக மொழியியல் ஆங்கில கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குநேற்று பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வணிக பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, யாழ். பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் ஞானகுமாரன், மொழியியல் ஆங்கில கழகத் தலைவர் கலாநிதி சுபதினிரமேஸ், கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன், மொழியியல் ஆங்கில கழக உதவி விரிவுரை யாளர் திருவரங்கன் ஆகியோர் நினைவுரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-டுசாந்தன்)

# தமிழ் நாட்டில் முற்றுகைக்குள்ளான இலங்கை ஜனாதிபதியின் செயலர்

(ராஜபாளையம்)

ராஜபாளையம் குவைத்ராஜா மக்கள் சமூக இயக்க நிறுவனர் குவைத்ராஜா. இவருக்கு பிறந்தநாள் வாழ்த்து கூற இலங்கை ஜனாதிபதியின் செயலர் கிப்ஸ் ரிங்கன அபேகுணவர்த்தன தலைமையில் இந்தியா சென்றது.

அவர்கள் நேற்று முன்தினம் ராஜபாளையத்திலுள்ளஅசோகா லொட்ஜில் தங்கியிருந்தனர். பா.ம.க.மாவட்டச் செயலர் இளங்கோவன்த ம.தி.மு.க. யோகசேகரன் மற்றும் தமிழர் அமைப்பினர் லொட்ஜை இரவு 10.15 மணி க்கு முற்றுகையிட்டனர்.

அவர்கள் இலங்கை பிரதிநிதிகள் தமிழகத்தை விட்டு வெளியேற வேண்டும் என கோஷமிட்டனர். (2-6)

# சிறுவர்களுக்குக்கெதிரான முறைகேடுகளை தடுப்பதற்கான விசேட திட்டம்

(கொழும்பு)

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல்கள் மற்றும் பல்வேறு முறைகேடுகளை தடுப்பதற்கான விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தேசிய சிறுவர் சபையூடாக இதனை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் தெரிவிக்கின்றது.

சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற துன்புறுத்தல்கள் தொடர்பில் சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும் என திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களின் பங்குபற்றுதலுக்கான உரிமைக்காகவும் அவர்களுக்கு செவிமடுத்தலுக்காகவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் சபையின் மூலம் எதிர்காலத்தில் இது தொடர்பாக பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களை தடுப்பதற்கான கொள்கைகளை வகுத்து உரிய அமைச்சின் இணக்கப்பாட்டுடன் செயற்படும் தேசிய சிறுவர் சபை எண்ணியுள்ளது.

சிறுவர்களிடம் காணப்படுகின்ற விஞ்ஞான ரீதியான திறமைகளை ஊக்குவித்தல் குறித்துதேசிய சிறுவர் சபை திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிட்டார். (2-4)

# கடற்கரையோரங்களில் உயிர் பாதுகாப்பு படையணி

சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் காணப்படும் கடற்கரையோரங்களில் உயிர்ப் பாதுகாப்புப் படையணி ஒன்றை ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவிக்கிறது.

இதன் முதற்கட்டமாகக் கரையோரப் பாதுகாப்பு முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் பாதுகாப்புக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய குறிப்பிட்டார்.

கடந்த சில தினங்களில் மூன்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டதாகவும் இத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இத்திட்டத்தைக் கட்டங்கட்டமாக முன்னெடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (2-6)

# புதுக்குடியிருப்பில் விரைவில் மீள்குடியேற்ற நடவடிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் விரைவில் மீள் குடியேற்றம் ஆரம்பிக்கப்படவிருப்பதாக மாவட்ட அர சாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

விஸ்வமடு, உடையார்கட்டு பிரதேசத்தினூடாக புதுக்குடியிருப்புக்கான மீள் குடியேற்றத்தை ஆரம்பிக்க தீர்மானித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

உடையார்கட்டு பிரதேசம் நிலக்கண்ணி வெடிகள் முழுவதும் அகற்றப்பட்டு மீள் குடியேற்றத்துக்கு தயார்படுத்தப்பட்ட நிலையிலுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் முன்னெடுத்து வருவதாகவும் இன்னும் இரண்டு, மூன்று வாரங்களுக்குள் புதுக்குடியிருப்புக்கான மீள் குடியேற்றப் பணிகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. கண்ணி வெடிகள் அகற்றப்படும் ஒழுங்கிற்கேற்ப மீள்குடியேற்றத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாவட்டத்தின் நகரப் பகுதிக்குள் மாத்திரம் இதுவரையில் ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரம் பேர் மீளக் குடியேறியுள்ளார்கள்.

இதேவேளை முள்ளியவளை, கள்ளப்பாடு ,வண்ணான்குளம் ஆகிய பகுதிகளிலும் தற்போது மீள் குடியேற்றம் நடத்தப்பட்டு வருவதாக அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# வறிய மாணவர்களுக்கான இராமகிருஸ்ணமிஷனின்நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் பல்கலைக்கழகம் சொல்லும் வறிய தமிழ் மாணவர்களுக்கு இராம கிருஸ்ண மிசன் புலமைப்பரிசில் வழங்கி மேற்படிப்புக்கு உதவி வருகின்றது. வருடாவருடம் இப் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களில் மிகவும் பொருத்தமான மாணவர்களை தேர்ந்தெடுத்து மாதாந்த விசேட நன்கொடைகளை வழங்கி வருகின்றது.

மட்டக்களப்பு இராமகிருஸ்ண மிசன் மட்டும் கடந்த ஆண்டு 75 மாணவர்களுக்கு இவ்விசேட நன்கொடைகளை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இலங்கை பூராக தேர்ந்தெடுக்கப்பட்ட பல நூறுமாணவர்களுக்கு இவ் உதவியை வருடாந்தம் செய்து வருகின்றது.

பல்கலைக்கழகக் கல்வி பூர்த்தியாகும் வரை இவ் உதவி அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அவ்வகையில் இவ்வாண்டு ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைத்து கற்கும் 12 தமிழ் மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இராமகிருஷ்ண மிசனின் காரைதீவு சிறுமியர் இல்லத்தில் சனிக்கிழமை இலங்கைக்கான தலைவர் சிறிமத்சுவாமி சர்வரூபானந்தாஜி மகராஜ் சிறப்பதிதியாக கலந்துகொண்டு குறிப்பிட்ட 12 மாணவர்களுக்கும் ஆரம்ப கட்ட கொடுப்பனவை வழங்கினார்.

பிரஸ்தாப மாணவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ,முல்லைத்தீவு, பதுளை குருநாகலை,வவுனியா , அக்கரைப்பற்று, களுத்துறை கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்பவர்களாவர்.

இந்நிகழ்வில் சுவாமி ஞானமயோனந்தாஜீ,காரைதீவு இல்ல முகாமையாளர் பொ.சிவயோகன்,ஆசிரியை திருமதி எஸ்.நித்தியானந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (2-6)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பகுதித் தலைவர் திரு.தி.கிருபாகரன் அவர்களின் அன்பு மாமனார்

**மகேசசர்மா யோகீஸ்வரசர்மா**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கூட்டுறவு திறந்த விற்பனை நிலையத்திறப்பு விழா நேற்று யாழ்.மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாச முன்றலில் நடைபெற்றது.இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மங்கல விளக்கேற்றுவதையும், யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் நாடாவெட்டி திறந்துவைப்பதையும், திறந்து வைக்கப்பட்ட மேற்படி நிலையத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## சாவகச்சேரியில்
## இராணுவத்தினர் நடத்தும் புதுவருட விழா

(சாவகச்சேரி)

நெஸ்லேயின் அனுசரணையுடன் பாதுகாப்புப் படையினர் நடத்தும் மாபெரும் தமிழ் சிங்கள புதுவருட விழா நாளை புதன்கிழமை காலை 7 மணிமுதல் இரவு 11 மணிவரை சாவகச்சேரி நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இருபாலாருக்கும் மரதன் ஓட்டம், சைக்கிளோட்டம் உட்பட பல்வேறு போட்டிகளும் அழகுராணிப் போட்டிகளும் நடக்க இருப்பதுடன் இரவு 7.30 மணிமுதல் சாவகச்சேரி வர்த்தக சங்கத்தின் அனுசரணையுடன் இராகம்ஸ் இசைக் குழுவினரின் இன்னிசைகான நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6-29)

யாழ்.செய்திகள்

# மலேரியா நோயை தொடர்ந்தும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்போம்

## யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரை



(யாழ்ப்பாணம்)

அன்று கொடிய நோயாக திகழ்ந்த மலேரியாவை தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த மகத்தான வெற்றியை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வோம் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிறு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற உலக மலேரியா தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் மலேரியா நோய் கொடிய நோயாகத் திகழ்ந்து வந்ததனை எம்மால் மறக்கமுடியாது.இந்நோய் ஆசியா, தென் னாபிரிக்கா போன்ற நாடுகளில் மிக வேக மாகப் பரவி தாக்கியுள்ளது.

இலங்கையில் குறிப்பாக உலர் வலயப் பிரதேசங்களில் அதிகமாக காணப்பட்ட மலேரியா நோய்க்கெதிராக நாம்மேற்கொண்டு வந்த போராட்டம் நீண்டவரலாறு. இலங்கையில் 1963 ஆம் ஆண்டில் 17 நோயாளர்கள் இனங்காணப்பட்ட பின்னர் அடுத்து வந்த ஆண்டுகளில் பல இலட்சம் பேர் இந் நோயால் பாதிப்படைந்தனர். இவ்வாறு பலபேர் பாதிக்கப்படுவதற்கு அன்று நாம் விட்ட தவறே காரணம்.

இருந்தாலும் நாம் அனைவரும் கடின மான உழைப்பின் அர்ப்பணிப்பான சேவையாலும் துன்பங்களுக்கு மத்தியிலும் ஆளணி பற்றாக்குறையிலும் மலேரியாவைத் தடுத்து நிறுத்தி மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறோம்.

இதற்கு பாடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இவ் வெற்றியைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டு மலேரியா கட்டுப்பாட்டையும், நுளம்புப் பெருக் கத்தையும் கட்டுப்படுத்தி புதிய குழுவை அமைத்துக்கொள்வோம் என்றார். (2-30)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் ஆலய இரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பஞ்சமுக கணபதி அழகிய சித்திரத் தேரில் எழுந்தருளி வீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (4)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி ஸ்கைலைன் தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் கற்கைநெறியினை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு வட்டுக்கோட்டை இந்து நவோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வட்டு. இந்துக் கல்லூரி கணக்கியல் ஆசிரியர் சி.திருக்குமரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன், சிறப்பு விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், கௌரவ விருந்தினர்களாக வட்டு. இந்து நவோதாயக் கல்லூரி அதிபர் திருமதி அ.ஜெகதீஸ்வரி, பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன், சங்கானை செலான் வங்கி முகாமையாளர் ராஜதுரை சிறிறமணி,மூளாய் ஐ.என்.எஸ்.ஜி.டி.இயக்குநர் திருமதி இ.பொன்மலர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(6-30)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

சகல பாடத் துறைகளையும் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கற்பித்தல் கற்றல் முறையியல்கள் வளவிருத்தியும் பயன்பாடும் தொடர்பான செயலமர்வு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வடமராட்சி மகளிர் கல்லூரி, நெல்லியடி ஆசிரியர் நிலையம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய நான்கு நிலையங்களில் நடத்தப்படவுள்ளது.

இதில் ஒரு தொகுதியினருக்கு எதிர்வரும் 28,29,30 ஆம் திகதிகளிலும் மற்றைய தொகுதியினருக்கு மே மாதம் 4, 5, 6 ஆம் திகதிகளிலும் காலை 8 மணி முதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் கலந்து கொள்பவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.(4-19)

## கையடக்கத் தொலைபேசி திருத்துதல் பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி திருத்தல் பயிற்சி தொழிற்துறைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ளது.

பயிற்சியில் ஆர்வமுடைய ஆண், பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் தங்களது சுய விபரத்தை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (6)

## வடமராட்சி கல்வி வலயத்தில்
## சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் தரம் -I ஆசிரியர் தரம் 2- I சேர்ந்த குறிப்பிட்ட பாடங்களில் நிபுணத்துவம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதில் ஆரம்பக் கல்வி , விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக் கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும், மனைப்பொருளியல், விவசாயம், வர்த்தகம், வழிகாட்டலும் ஆலோசனையும், இரண்டாம் மொழி சிங்களம் ஆகிய பாடத்துறைகளுக்கே விண்ணப்பிக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி வலய நிர்வாகப்பிரிவில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கையளிக்குமாறும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

## தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைய்யால் கட்டுநாயக்காவிலுள்ள எந்திரதொழில் நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருடப் பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணிதப் பாடங்களில் சித்தியடைந்துள்ளதுடன் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் இது தொடர்பான விபரத்தையும் விண்ணப்பத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை, இல.7 கோவில் வீதியில் அமைந்துள்ள வட மாகாண அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் இல -1651 (23.04.2010) வர்த்தமானியிலோ அல்லது www.iet.edu.lkஎன்ற இணையத்தளத்திலோ பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் நாளை புதன்கிழமை சித்திரா பூரணை நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசைகளும் காலை ஏழு மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து காலை எட்டு மணிக்கு வில்லூன்றி புனிதத் தீர்த்தத்தில் தீர்த்த வாரி நடைபெற்றபின் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப் பணங்கள் செய்துகொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தர்ம பரிபாலனசபை அறிவித்துள்ளது. (6-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் ஓர் அறிமுகம்

1

**புற்றுநோய் என்றால் என்ன?**

இது உடற்கலங்கள், உடலின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் (கட்டிகள்) எனக் கொள்ளலாம். இது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.

**இலங்கையில் புற்றுநோய்...**

இலங்கையில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஒரு வருடத்தில் சுமார் 12000 புதிய புற்றுநோயாளர்கள் இனங் காணப்படுகிறார்கள். பெரும்பாலோனோர் பிந்திய நிலையிலேயே வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**புற்று நோய்க்குரிய எச்சரிக்கை அறிகுறிகள் யாவை?**

- நீண்டகாலம்நிலைத்திருக்கும்இருமல் /குரல் வித்தியாசம்.
- குணமடையாத புண்
- உடம்பில் கட்டு, தழும்பு அல்லது உண்ணி ஏற்படுதல் அல்லது பல காலமாக இருந்து திடீரென வளர்ச்சியடைதல்.

எவையென இன்னமும் கூறமுடியாதுள்ளது. எனினும் புற்றுநோயானது வாழ்க்கை முறை, பரம்பரை மற்றும் சுற்றாடல் காரணிகளின் கூட்டுத்தாக்கத்தின் விளைவாகவே ஏற்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

**புற்று நோயை ஏற்படுத்துவதற்கான பாதகமான காரணிகள்**

1) புகையிலை பாவித்தல்

இதனை புகைப்பதினாலோ, அப்புகையை அருகில் இருந்து உள்வாங்குவதனாலோ அல்லது இதனை பாக்கு, சுண்ணாம்புடன் உட்கொள்ளுவதனாலோ பாதிப்பு ஏற்படும்.

2) மதுபானம் அருந்துதல்

இதன் எரிவுத்தாக்கத்தால் வாய், களப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்துடன் இதனால் ஈரல் பாதிப்படைந்து ஈற்றில் ஈரல் புற்றுநோய் ஏற்படும்.

3) மாறுபட்ட உணவுப் பழக்கம்

4) வாய்ச் சுகாதரம் இன்மை

5) இரசாயனப் பதார்த்தங்கள்

தியரை நாடி குணமாக்கும் வகையிலான பூரண சிகிச்சை பெறக்கூடியதாகவிருக்கும். அவ்வாறன்றி பிந்திய நிலையில் புற்றுநோய் இனம் காணப்படுமாயின் சிகிச்சை பலனளிக்காதென்பது குறிப்பிடத்தக்கது.

**வாய்ப்புற்று நோய் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள்**

1) வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை போன்ற வற்றை மெல்லுதல்.

2) பீடி, சுருட்டு, சிகரெட் புகைத்தல்


3) ஒழுங்கற்ற வாய்ச்சுகாதாரம்.

4) மதுபானம் அருந்துதல்

5) பின்வரும் சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் ஏற்படும் உறுத்தலினால் உண்டான புண்.


- கூரான உடைந்த பற்கள்
- சரியான அளவில் செய்யப் படாத செயற்கைப் பற்கள்

6) அதிகளவான மிளகாய், மிளகாய்த்தூள் பாவித்தல்



தசைத் துண்டுகள்

- வழமைக்கு மாறான இரத்தக்கசிவு
- மார்பகங்களில் / வேறு இடங்களில் ஏற்படும் கட்டிகள் அல்லது தடிப்புகள்
- பெண் யோனி வழியில் இருந்து அசாதாரண இரத்தம் அல்லது வெள்ளப் போக்கு ஏற்படுதல் அல்லது மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப் போக்கு ஏற்படுதல்.




- மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளிவரல்.
- அதிக காலமாக நீடித்திருக்கும் அஜீரணம் (சமிபாட்டின்மை) அல்லது விழுங்குவதில் உள்ள கஷ்டம்.

**புற்று நோய்க்கான காரணிகள் யாவை?**

புற்றுநோய்க்கான சரியான காரணிகள்

அதிக காலம் இவற்றை கையாண்டு வேலை செய்வோர்க்கு குறிப்பாக இரத்தப் புற்று நோய் மற்றும் சிறுநீர்ப்பைப் புற்று நோய் என்பன ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

6) பெண்கள் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்று நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

7) சூரியனில் இருந்து வரும் UV கதிர்கள் மற்றும் ஓசோன் படலத்தின் உடைவால் பூமியை அடையும் பாதமான சூரியக்கதிர்கள்.

8) அணுக்கதிர்த் தாக்கம்

9) புற்றுநோயாளரின் நெருங்கிய உறவினராயிருத்தல்

ஒரு சில புற்றுநோய்கள் உதாரணமாக மார்பகப் புற்றுநோய், குடற்புற்றுநோய் மற்றும் இரத்தப் புற்று நோய் என்பன பரம்பரை ரீதியாக கடத்தப்படுகின்றன.

10) நல்ல உடற்பயிற்சியின்மை.

**வாய்ப்புற்று நோய்**

வயது முதிர்ந்தோரை அதிகம் பாதிக்கின்றது. புற்றுநோய் முன்னிலைகளான உயர்ந்து தென்படும் அகற்ற முடியாத வெண்ணிற / செந்நிற தழும்புகளை கண்ணாடியில் பார்த்து இனம் காண முடியும்.

இவ்வாறு இனம் காணப்படுமிடத்து வைத்

**யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவும், மருதனார் மடம் புற்றுநோய்க் காப்பகமும் இணைந்து இன்று யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடத்தும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சியையொட்டி இவ்விழிப்புணர்வுக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

7) பீடை கொல்லி போன்ற இரசாயனப் பதார்த்தங்களினை அதிகளவில் பாவித்தல்

8) சூரிய ஒளியின் UV கதிர்களின் தாக்கம் - குறிப்பாக உதடுகளில் ஏற்படும்.

9) போசாக்கு குறைபாடு

**வாய்ப்புற்று நோயின் அறிகுறிகள்**

- ஆறாத வாய்ப்புண்



- வாயினுள் தடித்துக் காணப்படும் வெள்ளை, சிவப்பு நிறமான தழும்புகள்
- வாய்க்குழியின் கவசத்தோல் கழன்று போதல்
- உதடுகளிலோ, வாயினுள்ளோ வளரும்
- மெல்லுதலிலும் விழுங்குதலிலும் ஏற்படும் சிரமம் அல்லது வலி.
- தெளிவான காரணங்கள் அற்ற நிலையில் பற்களின் உறுதி தளருதல்

புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு,
யாழ். போதனா வைத்தியசாலை.

- தாடையை அசைப்பதில் சிரமம்
- வாய்க்குழி உணர்வற்றுப் போதல்
- கழுத்துப் பகுதியில் நிணநீர் முடிச்சுக்கள் வீங்குதல்.

**நீங்களே உங்கள் வாயைப் பரிசோதிக்கலாம்!**

- உங்கள் கைகளை சுத்தமாகக் கழுவுங்கள்.
- முகம்பார்க்கும் கண்ணாடி முன்பாக நில்லுங்கள்
- உங்கள் முகத்தில் ஏதேனும் வீக்கங்கள், கட்டிகள், புண்கள் உள்ளனவா என விரல்களின் நுனியினால் சோதித்துப் பாருங்கள். முகம் சமச்சீராக உள்ளதா என கவனியுங்கள்.

(தொடரும்)

# ஐ.தே.க.வின் சில உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைய ஆர்வம்

**எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு**

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள ஆர்வம் காட்டும் உறுப்பினர் தம்முடன் தொடர்பு கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் உரிய நேரத்தில் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு தாம் அவர்களுக்கு ஆலோசனை வழங்கியதாக மேலும் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் அநேகமாக மாற்றம் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கட்சி தாவுவோர் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தெற்கைச் சேர்ந்த சில எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைய முயற்சிப்பதாக வெளியான தகவல்கள் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

தமக்கு ஞான திருஷ்டி கிடையாது எனவும் கட்சி தாவுவோர் தொடர்பில் எதிர்வு கூறல்களை வெளியிட முடியாது எனவும் தமது நிலைப்பாடு ஐக்கிய தேசியக் கட்சியில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிப் பிரதித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் பதவிகள் குறித்த செய்திகள் வெறும் வதந்திகளே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**இருபது வருட சொந்தமண் கனவு**

# வலிகாமம் வடக்கு மக்களின் துயரங்கள் தொடர்கின்றன

கடந்த இருபது வருடங்களாக அகதிகளாக அலையும் வலிகாமம் வடக்கு மக்கள் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குடியமர்ந்து பல்வேறு துன்ப துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இம்மக்களுக்கு உறுதியானதும் இறுதியானதுமான ஒரு முடிவு விரைவில் எடுக்கப்பட வேண்டும் என கடந்த வெள்ளிக்கிழமை இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

புனர்வாழ்வு முகாம்களில் இருந்து மக்கள் வெந்து வேகுகின்ற துயரம், மாற்றார் வீடுகளில் வாழ்ந்து வரும்பொழுது உரிமையாளர்கள் வீடுகளை விடும்படி வற்புறுத்துவது, வன்னியிலிருந்து வந்த வலி, வடக்கு மக்கள் அகதிகளாக அலைவது, வேலை வாய்ப்பு இல்லாத நெருக்கடி, முதலான பிரச்சினைகள் வலிகாமம் வடக்கு மக்களின் வாழ்வில் பாரிய அதிர்வுகளை உண்டு பண்ணியிருப்பதாக கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொறுமையின் எல்லையை கடந்து விட்டபடியால் இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு காலம் தாழ்த்த வேண்டாம் என்று அங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு இந்த மக்களின் பிரச்சினைகளை 75 சதவீதம் தீர்க்கப்படும் எனவும் கிராமங்களில் உள்ள முக்கிய ஆலயங்களுக்கு சென்று மக்கள் வழிபாடுகளை செய்ய அனுமதி வழங்கப்படும் எனவும் குறிப்பிட்ட போதும் ஜனாபதித் தேர்தலின் பின்னர் அப்பிரதேசங்களுக்கு மக்கள் சென்று வரத் தடை விதிக்கப்பட்டதையும் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடுப்பு வலி ஏன் ஏற்படுகிறது?

பொதுவாக நாம் அனைவரும் அன்றாடம் தலைவலி, இடுப்புவலி, கழுத்து வலி, முதுகு வலி போன்ற ஏதாவது ஒரு வலியால் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறோம். இதற்கு தனிப்பட்ட பல காரணங்கள் இருப்பினும் இந்த வலிகளில் இருந்து யாரும் தப்ப முடியாது என்பதுதான் உண்மை.

இரண்டு எலும்புகள் சேர்ந்து ஒரு மூட்டை உருவாக்குகின்றன.அந்த மூட்டுக்கு நரம்புகள், இரத்தக் குழாய்கள், திரவங்கள் என்று பல மாதிரியான அமைப்புகள் உடலில் இடத்திற்கு இடம் மாறுபட்டு அமைந்துள்ளது.பெரும்பாலானோர் அன்றாடம் பாதிக்கப்படுவது முதுகுவலியால் தான்.

நாம் நேராக நிமிர்ந்து நடக்க நிற்க உதவுபவை முதுகுத் தண்டும் அது சார்ந்த எலும்புகளும்தான். அதனூடேதான் மூளை தொடர்பான தண்டுவடம் சென்று அத்தனை உறுப்புகளிலிருந்து வரும் தகவல்களை மூளைக்கு கொண்டு செல்ல பயன்படுகிறது.

இந்த தண்டுவடத்தை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்கும் எலும்புகள் மொத்தம் 32. இந்த எலும்புகளுக்கு இடையே தட்டுக்களும் அதில் ஈரத் தன்மையுடனான சவ்வுகளும் இருப்பதால், நாம் அசைகையில், குதிக்கும்போது, இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்யும் போது, ஆட்டோவில் செல்லும் போது என குதிகாலில் அதிர்வுகள் ஏற்படாது இருக்க உதவுகிறது.

குண்டு- குழியான பாதையில் இரு சக்கர வாகனத்தில் அடிக்கடி வெகுதூரம் பயணிப்பது, இருக்கையில் நேராக சரியான நிலையில் உட்காராமல் இருப்பது, முறையற்ற உடற்பயிற்சி அல்லது உடற்பயிற்சியே இல்லாமை, எலும்புகளில் ஏற்படும் சுண்ணாம்புக் குறைவு, சரியாக குணப்படுத்தப்படாத வாயுக் கோளாறு, முதுமை ஆகியவை காரணமாக இந்தத் தட்டுக்கள் பாதிக்கப்பட்டு கழுத்து, இடுப்பில் வலி ஏற்படும்.

இடுப்பு, கழுத்து, தலைப் பகுதிகளில் தீவிர வலி, தசைகளில் இறுக்கம் ஏற்படும். இவற்றுடன் இடுப்பு எலும்புத் தேய்வு காரணமாக பிட்டம், பின்னங்கால், தொடைப் பகுதிகளில் வலி ஏற்படக் கூடும். காலை உயர்த்தும் போது வலி கூடும், கழுத்து, எலும்பு தேய்மானம் அடையும் நிலையில் கைகளில் வலியும் ,உள்ளங்கை யில் மரத்துப் போன உணர்வும் ,சில நேரங்களில் எறும்பு ஊறுவது போன்றும், எரிச்சல் போன்றும் வலி ஏற்படும்.



தட்டு நகர்வின் அளவு, திசை மற்றும் எந்தப் பகுதி தட்டுக்கள் பாதித்துள்ளன என்பதைப் பொறுத்து வலியும் வேதனையும் மாறுபடும் நோயாளியைப் பரிசோதனை செய்வது, எக்ஸ்ரே படம் ஆகியவை மூலம் பாதிப்பைத் துல்லியமாகக் கணிக்க முடியும்.

கட்டுப்பாடின்றி சிறுநீர் கழித்தல், உணர்வு மாற்றம் அதிகம் இருப்பின் சி.டி.ஸ்கேன், எம். ஆர்.ஐ. ஸ்கேன் பரிசோதனைகள் தேவைப்படலாம். உணவு, உடற்பயிற்சி, உள் மருந்து, புறமருந்து என சித்த மருத்துவத்தில் கூட்டு சிகிச்சை மூலம் இடுப்பு, கழுத்து வலி, தட்டு பிறழ்தல் பிரச்சினையை நிரந்தரமாகக் குணப்படுத்த முடியும்.

உருளைக்கிழங்கு, பட்டாணி, காராமணி, வாழைக்காய், அதிக புளி, குளிர்பானங்கள் ஆகியவற்றை இந்த நோயாளிகள் அறவே தவிர்க்க வேண்டும்.குறிப்பாக வாயு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய உணவுப் பொருட்கள் அனைத்தையும் தவிர்க்க வேண்டும்.

உணவில் முடக்கத்தான் கீரை, இஞ்சி, பூண்டு போன்ற வாயு நீக்கும் உணவுகளை அதிகம் சேர்க்கவேண்டும். மருத்துவரின் ஆலோசனையுடன் கூடிய சரியான உடற்பயிற்சி மற்றும் யோகாசனங்கள் ஆகியவை சில நேரங்களில் கழுத்து, இடுப்பு வலி பிரச்சினையை உள் மருந்துகள் இல்லாமலே குணப்படுத்தும் ஆற்றல் பெற்றவை. அதனால் இவற்றை செய்யலாம்.

சூரிய நமஸ்காரம், திரிகோணாசனம், வஜ்ராசனம், யோகமுத்ரா, மகாமுத்ரா, சலபாசனம், தனுராசனம், புஜங்காசனம் போன்ற ஆசனப் பயிற்சிகள் மருந்துகளுடன் சேர்த்து நோயை விரைவில் குணப்படுத்திட உதவும். சித்த மருத்துவத்தில் இந்த நோயை தொக்கண சிகிச்சையான புற மருத்துவ முறையிலும், வர்ம உள் மருந்துகளாலும் குணப்படுத்த முடியும். கழுத்து, இடுப்பு,முதுகு எலும்பு வலி பிரச்சினை வந்துவிட்டால் அச்சம் கொள்ளத் தேவையில்லை. சித்த மருத்துவம் அதன் பிரிவான தொக்கண மருத்துவம், வர்ம மருத்துவம் ஆகியவை மூலம் வலியைக் குறைத்து முழு நிவாரணத்தைப் பெறலாம்.

டாக்டர் ப.உ.லெனின்
சென்னை




# பித்தம் நீக்கும் அகத்திக்கீரை!



அகத்தியில் இருவகையுண்டு, வெள்ளைப்பூ உடையது அகத்தி என்றும், செந்நிறம் பூவுடையது செவ்வகத்தி என்றும் அழைக்கப்படும்.

**அகத்திக் கீரையின் மருத்துவக் குணங்கள்**

அகத்திக் கீரை வாரம் ஒருமுறை சமைத்து உண்ண வெயிலில் அலைவதால் ஏற்படும் வெப்பம், மலச்சிக்கல், கோப்பி,தேநீர் ஆகியவற்றைக் குடிப்பதால் ஏற்படும் பித்தம் ஆகியவை தீரும்.அகத்தி மரப்பட்டை,வேர்ப்பட்டை வகைக்கு கைப்பிடியளவு எடுத்து 1/2 லீற்றர் நீரில் போட்டு 200 மி.லீ.யாகக் சுண்டக்காய்ச்சி வடிகட்டி 100 மி. லீ.அளவு இருவேளை குடித்து வர காய்ச்சல், தாகம்,கைககால் எரிச்சல், மார்பு எரிச்சல், உள்ளங்கால், உள்ளங்கை எரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்த் தாரை எரிவு , அம்மைக் காய்ச்சல் குணமாகும்.

அகத்தி இலைச்சாறும், நல்லெண்ணெய்யும் வகைக்கு ஒரு லீற்றர் கலந்து பதமாகக் காய்ச்சி வடிப்பதற்கு முன்பு மஞ்சள்,சாம்பிராணி, கிச்சிலிக்கிழங்கு, விளாமிச்ச வேர் வகைக்கு 20 கிராம் பொடி செய்து போட்டுக் கலக்கி வடிகட்டி வாரம் ஒரு முறை தலையிலிட்டுக் குளித்து வரப் பித்தம் தணிந்து தலைவலி நீங்கும். கண்கள் குளிர்ச்சி பெறும்.

சிறிது உப்பு சுவையும், குளிர்ச்சித் தன்மையும் கொண்ட இக்கீரையை வேறு மருந்துகள் உண்ணும் காலங்களில் உண்ணக் கூடாது.

ஏனெனில் மருந்துகளின் வீரியத்தை அகத்திக் கீரை குறைக்கவும் அழித்து விடவும் செய்யும்.

இக்கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் இரத்தம் கெட்டுப் போகும் வாய்ப்புண்டு.சொறி, சிரங்கும் தோன்றலாம். இரத்தம் குறைந்து இரத்தசோகை ஏற்படலாம். வயிற்றுவலியும் பேதியும் உண்டாகலாம்.

காய்ச்சல் நேரத்தில் இக்கீரையைப் பிழிந்து அதன் சாற்றில் இரு துளி மூக்கில் விட்டால் காய்ச்சல் நீங்கும். அகத்தி இலைச் சாற்றை நெற்றியில் தடவி நெற்றியை இலேசாக அனலில் காண்பிக்க கடுமையான தலைவலி நீங்கும்.

சுண்ணாம்புச் சத்து, விற்றமின் ஏ நிறைய உள்ளது.போதுமான பால் சுரக்காத தாய்மார்கள் தொடர்ந்து அகத்திக் கீரையை சாப்பிட நன்கு பால் சுரக்கும்.

இக்கீரை சமைக்கும்போது நன்றாக வேக வைத்து உண்ணவேண்டும்.வயிற்றில் உள்ள புழுக்களை வெளியேற்றும் சக்தி இக்கீரைக்கு உண்டு.மலச்சிக்கல் நீங்கும்.

குழந்தைகளுக்கு நீர்கோர்த்துக் கொண்டால் இக் கீரையின் சாற்றை ஐந்துக்கு ஒரு பங்கு தேன் கலந்து தலை உச்சியில் தடவினால் நீர்க்கோவை மறையும். அகத்தியிலையை அவித்து அரைத்துக் காயங்களுக்குக் கட்ட விரைவில் ஆறும். அகத்திப் பூச்சாறை கண்களில் பிழிய கண்நோய் குணமாகும்.

அகத்தி வேர்ப்பட்டை, ஊமத்தன் வேர் சம அளவாக எடுத்து அரைத்து வாதவீக்கத்திற்கும், கீல்வாயுக்களுக்கும் பற்றிட குணமாகும்.

இதுவாயுவை உண்டாக்கும் இயல்புடையது. எனவே வாய்வுக்கோளாறு உள்ளவர்கள் இக்கீரையை உண்ணக்கூடாது.

*நன்றி : - தமிழ்நாடு இயற்கை மருத்துவப்பிரிவு*

# உடல் எடையும் இரத்த அழுத்தமும்

தாயாகப் போகிறவர் வாரத்திற்கு அரை கிலோ வீதம் எடை அதிகரிக்க வேண்டும் என்பதால் எடை அளவீடுகள் மிக முக்கியம். அதற்காகத்தான்; ஒவ்வொரு மாதமும் கர்ப்பிணிகள் எடை பரிசோதிக்கப்படுகிறது.

அப்படி அதிகரிக்காமல் போகும் பட்சத்தில் கருக்காலத்தில் ஏற்படும் முக்கியக் குறைபாடான டாக்சீமியா அபாயம் உண்டாவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

இவ்வாறே, இரத்த அளவீட்டை அறியும் பரிசோதனையும் முக்கியம். இரத்த அழுத்தம் 140/90 என்கிற அளவீட்டிற்கும், அதற்கு அதிகப்படியான அளவீட்டிற்கும் சென்றுவிடக்கூடாது. இது அதிகபட்சமான அளவாகும்.

இரத்த அழுத்தஅளவு இந்த அளவை எட்டினால் சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி வரும்.

சிறுநீர்ப்பரிசோதனையில் அல்புமின் என்ற முக்கிய புரதப்பொருள் பரிசோதனை செய்யப்படுகிறது. ஏதேனும் தீவிர பிரச்சினை ஏற்படலாம் என்பதை எச்சரிக்கை செய்யும் அபாய அறிகுறிதான் இது. இதனைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியது அவசியம்.

# பொதுவான மருத்துவத் தகவல்கள்

- உளுந்து வடையை அதிகமாக சாப்பிட்டால் மூட்டுவலி போன்ற வாதம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அதிகப்படுத்தும். மேலும், பசியைக் கெடுக்கும், உடலுக்கு அதிகமான குளிர்ச்சியை உண்டாக்கும்.
- மாதுளம்பூக்கள் 15 கிராம் எடுத்து 25 கிராம் சீனி சேர்த்து மசிய அரைத்து காலை, மாலை ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் வெள்ளைப்பாடு நிவர்த்தியாகும்.
- மாதுளம் பூக்களைத் தலையில் வைத்துக் கொண்டால் தலைவலி, வெப்பநோய் தீரும்.
- ஏ.பி.சி. ஆகிய மூன்று விற்றமின்களும் நிறைந்த ஒரே பழம் வாழைப்பழம்.
- கறி வேப்பிலையில் வாய்ப்புண் வராமல் தடுக்கும் ரைபோபிளேபின் என்ற சத்தும், சோகை நோய் வராமல் தடுக்கும் போலிக் அமிலச் சத்தும் நிறைந்துள்ளன.
- வாழைத்தண்டு உடலில் உள்ள நச்சுப்பொருட்களையும் சிறுநீரகத்தில் உள்ள கற்களையும் நீக்க வல்லது.
- நகம்கடிக்கும் பழக்கம் தன்னம்பிக்கை இன்மையையும் நரம்புக் கோளாறுகளையும் காட்டுவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# களம் பல கண்ட யாழ் கோட்டை

16

## ஆங்கிலேயர் ஆட்சி

ஆங்கிலேயர் காலத்தில் அவ்வேலைகளைச் செய்வதற்கு நன்கு குடித்துச் சுய அறிவை இழக்கும் சுதேசிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தத் தூக்கு மண்டபத்தை முற்றவெளியில் நின்று பார்க்கலாம். மக்கள் குழுமி நின்று பார்க்கத்தக்கதாகவே குற்ற வாளிகளுக்கான தூக்குத் தண்டனையை அலுகோசுகள் நிறைவேற்றினர். நீதிபதிகளினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கோட்டையின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

ஒல்லாந்தரின் படை வீரர்கள் தங்கிய பாசறை வீடுகளை ஆங்கிலேயர் சிறைச்சாலைக்கான கட்டிடங்களாக மாற்றியமைத்தனர். அவற்றின் வலதுபக்கச் சுவரில் *கடவுளே அதியுயர் நீதிபதி* God is the Supreme Judge என்ற வாக்கியங் களைப் பொறித்தனர்.


ஆங்கிலேயப் படைவீரர்கள்

கோட்டையின் ஆங்கிலேயக் கமாண்டர் காற்றுவாங்குவதற்காகக் கோட்டைக்கு வெளியே உலா வருவான். ஒற்றைக் குதிரை பூட்டிய றிச்சோ போன்ற கோர்ச் வண்டியிலேறிப் பவனி வருவான். அவன் பின்னால் கொடி தாங்கிய சிங்களவர்கள் சிலர் வர, அவன் வண்டியின் முன்னாள் மேளங்களை இதமாக முழங்கியவாறு தமிழர்கள் சிலர் நடப்பார்கள். கோச் வண்டியின் இருபுறமும் துப்பாக்கி ஏந்தி குதிரை வீரர்கள் வருவார்கள். படாடோபமாகவும் வெகு அமர்க்களமாகவும் கோட்டையின் கமாண்டர் வாழ்ந்தான்.

### 29 ஜுன் 1887

யாழ்ப்பாணக் கோட்டை வெகு உற்சாகமாக விளங்கியது. கோட்டை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்து. கோட்டையைச் சுற்றியுள்ள முற்றவெளியில் அன்று பிற்பகல் மக்கள் நிரப்பி வழிந்தனர். கோட்டை முனியப்பர் கோயிலுக்குச் சமீபமாக இடப்பட்டிருந்த பாரிய அலங்காரப் பந்தரிலே அரசாங்க ஏசண்டர் துவைனம் தனது பரிவாரங்களுடன் அமர்ந்திருந்தார்.

ஆம், அன்று பிரித்தானிய மகாராணி விக்டோரியாவின் ஐம்பதாவது வருட மகுடோற்சவக் கொண்டாட்டத்தை கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அன்றிரவு ஏழரை மணிக்கு வாண விளையாட்டு நிகழவிருந்தது. இங்கிலாந்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் கொண்டு வரப்பட்ட வாணங்கள் (பட்டாசுகள்) வேடிக்கை காட்டவிருந்தன. முற்றவெளி கொள்ளாதபடி சனத்திரள் குவிந்து நின்றது.


விக்டோரியா மகாராணி

வாணவிளையாட்டு ஆரம்பமானது. பந்தரில் பலவகை வாணங்கள் குவிந்திருந்தன. வாணங்கள் வெடித்தன. ஆகாயத்தைக் கீறிக்கொண்டு கிளம்பிப் பூப்பூவாகச் சிந்தின. திடீரென சீமை வாணமென்று வழிதவறி அலங்காரப்பந்தின் வாணக் குவியலுட் புகுந்தது. பீரங்கி ஏன் வெடித்தது. அருகில் நின்ற சிலர் பலியாகினர். எங்கும் கூச்சல். மக்கள் திக்குத் திசை தெரியாது பாய்ந் தோடினார்கள். கூச்சல், கூக்குரல் முற்றவெளியெங்கும்நிறைந்தது. பொலிஸ் அதிகாரி றட்டுரைக்கு அருகில் நின்றிருந்த சார்ஜன் சுப்பையா மகனும் கடுங்காயமுற்று விழுந்தார்.

அரசாங்க ஏசண்டர் துவைனமும் பொலிஸ் அதிகாரி றட்டும் வேகமாகப் பாதுகாப்புத் தேடி ஓடிப்போய் திரும்பி வந்தபோது நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்திருந்தனர். அவர்கள் உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

1897 ஆம் ஆண்டு அதேயிடத்தில் விக்டோரியா மகாராணியின் அறுபதாவது ஆட்சி நிறைவு (வச்சிரயூபிலி) கொண்டாடப்பட்டது. ஆனால் அவ்வேளை வடமாகாண அர சாங்க ஏசண்டராகவிருந்த ஹேர்ஸ்பறோ வாண வேடிக்கைக்கு அனுமதியளிக்கவில்லை.

1940 ஆம் ஆண்டு வரை கோட்டையின் அரண்சுவர்களில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கிகள் நீக்கப்படாதிருந்தன. பின்னர் அவை அவ்விடங்களிலிருந்து அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட பீரங்கிகளும் பீரங்கிக் குண்டுகளும் காலகதியில் உருக்கப்பட்டன.

### 04 பெப்ரவரி 1948

ஆங்கிலேயரின் கொடி இலங்கை எங்கனும் இறக்கப்பட்டது. அவ்விடத்தில் ஸ்ரீலங்காவின் ஆதிக்கக் கொடி உயர்த்தப்பட்டது. தெளிவாகப் பிரிந்திருந்த தமிழரசையும் சிங்கள அரசையும் ஒன்றாகி பேரினவாதிகளின்

**செங்கை ஆழியான்**



கைகளில் தூக்கி வழங்கிவிட்டு ஆங்கிலேயர் விருப்பின்றி விலகிச் சென்றனர். (தொடரும்)

## மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கான புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்

### பந்துலகுணவர்தன தெரிவிப்பு



(கொழும்பு)

மாணவர்களின் கல்வியை மேம்படுத்த புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டு மென புதிய கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் முதல் பல்வேறு விடயங்களில் சட்டத்திருத் தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் இதற்கான சட்டதிருத் தங்களை மேற்கொள்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

தற்போழுது அமுலில் உள்ள முறைமை திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை என்றும் மாணவர்கள் சந்தோ சமாக பாடசாலைகளுக்கு செல்வதில்லை எனவும் ஆசிரியர்களுக்கு தொழிலில் திருப்தி கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டு கல்வி முறைமையில் எங்கோர் மூலையில் சிக்கல் இருப்பது இதன் மூலம் புலனாவதாகவும் வினைத்திறனான கல்விச் சேவையை உருவாக்குவதற்கு சகல கட்சிகளும் பங்களிக்க வேண்டும் எனவும் பாராளு மன்றத் தெரிவுக்குழுவில் சகல கட்சிகளினதும் உறுப்பினர்கள் அங்கம் வகிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் கல்வி தொடர்பில் தேசிய கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென குறிப்பிட்டுள்ளார். (2-6)

## தென்கிழக்குப் பல்கலையின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் மாணவர்களிடையே ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகப் பதில் பதிவாளர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கலை, கலாசார, வணிக, முகாமைத்துவம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி ஆகிய பீடங்களில் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாகவும் முதலாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் மேலும் தெரிவித்தார்.

இப் பல்கலைக்கழகத்தில் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி மாணவர் சங்கத் தேர்தல் தொடர்பாக இடம்பெற்ற மோதல் நிலைமை அடுத்து மறுநாள் 11ஆம் திகதி கால வரையறையின்றி பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஜீ.எஸ்.பி.சலுகைத் திட்டத்தை இரத்துச் செய்ய வேண்டாம்

### மல்வத்த அஸ்கிரியபீடாதிபதிகள் கோரிக்கை

(கொழும்பு)

ஜீ.எஸ்.பி. வரிச் சலுகைத் திட்டத்தை இரத்து செய்ய வேண்டாம் என கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி பெர்னாட் சர்வேஜ் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இந்த கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

ஐரோப்பிய பிரதிநிதியொருவர் முதல் தடவையாக கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு இந்தத் திட்டம் பல்வேறு வழிகளில் நன்மை அளிப்பதாக மாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மனித உரிமை விவகாரங்களை அடிப்படையாகக்கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான சலுகைத் திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை துரிதம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களை மீளக் குடியமர்த்தும் பொருட்டு நிலக் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தியுள்ளதாக இராணுவத்தினர் தெரி விக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டம் தவிர கிளிநொச்சி மாவட்டத்திலும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நிலக்கண்ணி வெடிகயற்கும் பணிகளில் இராணுவப் பொறியியல் படையணியின் சுமார் ஆயிரத்து 200 ரூபா துருப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட நவீன உபகரணங்கள் பல இந்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதாகவும் இராணுவத்தினரைத் தவிர 8 சுயேட்சைக் குழுக்களும் இந்த நடவடிக்கைகளில் பங்கேற்றுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் கூறினார். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தை மாற்றிய பின்னரும் இரட்டை பெண்குழந்தைகள்

## நவீன மருத்துவ முறைக்கு சவால்



(வோஷிங்டன்)

இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெண், ஒரே பிரசவத்தில் இரு குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார். இதுபோன்று உலகில் நடப்பது இதுவே முதல் முறை.

அமெரிக்காவின் தலைநகர் வோஷிங்டனைச் சேர்ந்தவர் ஸ்டெப்பானியா டிமேயோ (29). இவருக்கு இதயத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டதால், 2008 ஆம் ஆண்டு மாற்று இதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது.


இதையடுத்து டாக்டர்கள் அவரிடம் குறைந்தது ஓராண்டிற்காவது கர்ப்பம் தரிக்காமல் கவனமாக இருக்கவேண்டும் என்ற கடும் நிபந்தனை விதித்தனர். இருப்பினும் டாக்டர்களின் நிபந்தனைகளை புறந்தள்ளி விட்டு அவர் அடுத்த சில மாதங்களிலேயே கர்ப்பிணியானார்.

அவரை பரிசோதித்த டாக்டர்கள் மாற்றி பொருத்தப்பட்ட இதயம் விரைவில் செயலிழந்து விடும் என்று அஞ்சினர். ஆனால், அவர்களின் எண்ணத்தை தவிடு பொடியாக்கி விட்டு, தன் வயிற்றில் வளரும் சிசுக்களை கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். இதற்கிடையே அவரது வயிற்றில் வளர்ந்து வந்த சிசுக்களுக்கு டவுண் சின்ட்ரோம் என்ற நோய் தங்கியிருப்பதாக டாக்டர்கள் சந்தேகித்தனர். ஆனால், அவற்றை எல்லாம் கண்டு கொள்ளாமல் அப் பெண் தன் குழந்தைகளை பிரசவிக்க தயாரானார்.



தன் வயிற்றில் வளரும் குழந்தைகளுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என்று அப் பெண் நம்பினார். முடிவில் அவரது நம்பிக்கை வென்றது. சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம், இரு பெண் குழந்தைகளை பெற்றெடுத்தார்.

அக்குழந்தைகள் இரண்டும் ஆரோக்கியமாக இருக்கின்றன. அவைகளுக்கு அவர் மெலானியா, நடாலியா என்று பெயரிட்டு கொஞ்சி மகிழ்ந்து வருகிறார். (2-6)



உலகிலேயே முதன்முறையாக முகமாற்று அறுவைச் சிகிச்சை ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனா நகரில் வால்டி -ஹீபிரான் மருத்துவமனையில், வீதி விபத்தில் முகம் முழுவதும் சிதைந்த ஒரு இளைஞருக்கு வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதனை சிகிச்சை அளித்த டாக்டர் ஜோன் பிரே பேரட் செய்தியாளர்களுக்கு டி.வி.வரைபடத்துடன் விளக்குகிறார்.

# பூமிக்குள் அதிக வெப்பம் எப்போது வெளிப்படும்?

(வோஷிங்டன்)

கடந்த சில ஆண்டுகளாக பூமி மேற்பரப்பில் நிலவிய வெப்பத்தை, பூமி உள் இழுத்துக் கொண்டிருக்கிறது. அடுத்த சில ஆண்டுகளில், அது மீண்டும் வெளிப்பட்டு, பூமிக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் கொலரோடாவைச் சேர்ந்த, தேசிய காலநிலை ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் கூறியுள்ளதாவது, கடந்த 2003இல் இருந்து, பூமியில் நிலவிய வெப்பத்தைக் கணக்கிட்டு பார்த்ததில், ஒரு அதிர்ச்சி விடயம் தெரியவந்தது. இந்த ஏழு ஆண்டுகளில், பூமியில் ஏற்பட்ட வெப்பத்தின் ஒரு பகுதியை காணவில்லை. அது எங்கோ ஒரு இடத்தில் மர்மமாக மறைந்துள்ளது.

இந்த வெப்பம் எங்கே மறைந்துள்ளது என்பதை கண்டுபிடிப்பதற்கு, தற்போது நம்மிடமுள்ள கருவிகளில் போதிய வசதி இல்லை. இந்த ஆராய்ச்சி தவறாகவும் இருக்கலாம் அல்லது, கடலின் மிக அதிக ஆழத்தில் இந்த வெப்பம் மறைந்திருக்கலாம்.

கடந்த ஆண்டு, "இ1 நினோ" என்று பெயரிடப்பட்ட, கடல்நீர் வெப்பநிலை கூடி விவகாரம், மறைந்திருக்கும் வெப்பத்தி[ன்] தாக்கமாகக் கூட இருக்கலாம். பூமியின் மே[ல்] பரப்பிலுள்ள நச்சுவாயு, சூரியனிடமிரு[ந்து] அதிக வெப்பத்தை ஈர்த்த வண்ணம் உள்ள[து] என சாட்டிலைட் கருவிகள் தெரிவிக்கின்ற[ன].

பின்னொரு நாளில், இந்த வெப்[பம்] மீண்டும் வெளிப்பட்டு பூமிக்கு பெரும்பாதி[ப்பை] ஏற்படுத்தலாம். இதனால் கால நிலையி[ல்] பாதிப்பு ஏற்படலாம். எங்கோ ஒரு பகுதி[யில்] மறைந்துள்ள இந்த வெப்பம் வெகுவி[ரை]விலோ அல்லது சிறிது காலம் கழித்[தோ] வெளிப்படலாம்.

பனிமலை அடுக்குகள் உருகுவதன் மூலமாகவோ, கடல் நீர் மட்டம் அதிகரிப்பதன் மூலமாகவோ இந்த வெப்பம் வெளியாவதற்கு வாய்ப்புள்ளது என்றனர். (2-6)

# இரண்டு சதுர மீற்றரில் வாழ்க்கை சீனாவில் கடும் இடநெருக்கடி



சீனாவில் பல்வேறு கிராமங்களிலிருந்து வேலைவாய்ப்புக்காக பீஜிங் உள்ளிட்ட பெரு நகரங்களுக்கு இலட்சக்கணக்கான இளையோர் படையெடுக்கின்றனர்.

இப்படி வரும் இளையோரை எறும்புக் குழு என்கிறார் பேகிங் பல்கலைப் பேராசிரியர் லியன் சின். பீஜிங்கில் மட்டும் இப்படி ஒரு இலட்சம் எறும்புக் குழுவினர் இருக்கின்றனர். பிற நகரங்களில் 10 இலட்சம் பேர் வரை இருக்கின்றனர். இவர்களால் பெருநகரங்களில் வீட்டு வாடகை கன்னாபின்னாவென்று ஏறிவிட்டது.


வேலைக்கு வந்த இளைஞர்கள் கிடைத்த வேலையைச் செய்து குறைந்த சம்பளம் தான் வாங்க வேண்டிய நிலை நிலவுகிறது. அந்தச் சம்பளத்தில் வாடகையும் கொடுத்து குடும்பத்தையும் கவனித்துக் கொள்வது பெரும் சுமை தான். அதனால் சில நகரங்களில் சேரிப் பகுதிகளில் இவர்கள் குடியிருக்கின்றனர்.

இப்போது அங்கும் வாடகை அதிகரித்து விட்டதால் வேறு சில நகரங்களில் நகருக்கு வெளியே சாலையோரமாக வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் உபயோகமற்ற கன்டெய்னர்களில் குடும்பத்துடன் குடியேறுகின்றனர். இந்தக் கன்டெய்னருக்கு ஒரு நாள் வாடகை 40 ரூபாய். அட்வான்ஸ் 65 ஆயிரம் ரூபாய். இந்தக் கன்டெய்னரும் கிடைக்காதவர்கள் பொதுக் கழிவறைகளில் படுக்கை, சமையல் சாமான்களோடு குடியேறி விடுகின்றனர்.

ஊடகங்கள் இதுகுறித்து பரபரப்பாக படம் எடுத்துப் போட்டும் இப்பிரச்சினைக்கு இது வரை தீர்வு கிடைக்கவில்லை. சீன அரசு 28 ஆயிரம் கோடி ரூபாய் செலவழித்து நிலக் குடியிருப்புகள் தொகுப்பு கட்டிக் கொடுத்து குறைந்த வாடகைக்கு விடுவது குறித்துத் திட்டமிட்டது. ஆனால் ரியல் எஸ்டேட் தொழில் முதலைகள் தங்கள் வரும்படியில் மண் விழுந்து விடுமோ என்று பதறிப் போய் அந்தத் திட்டத்தையே கைவிடச் செய்தனர்.

இதற்கிடையில் சமீபத்தில் இளம் பெண் ஒருவர் 2 சதுர மீற்றர் பரப்பளவே உள்ள ஒரு மிகச் சிறிய அறையில் குடியேறியிருக்கிறார். சீனாவிலேயே இவ்வளவு குறைந்த பரப்பளவில் குடியேறிய முதல் சீனக் குடிமகள் ஜங் தான்.

இதுபோல பல அறைகள் உள்ள அப்பார்ட்மென்ட்டுக்குத்தான் கேப்சூல் அப்பார்ட்மென்ட் என்று பெயர். அந்தப் பரப்பளவில் ஒரே ஒரு படுக்கையை மட்டும்தான் போட முடியும். இதற்கு முன்பு இவர் தன் தோழிகளோடு ஒரு அப்பார்ட்மென்டில் இருந்தபோது இவரது பங்கு வாடகை மட்டுமே ஐயாயிரம் ரூபாய் வந்தது. அதையும் கொடுத்து குடும்பத்தையும் கவனிக்க முடியாததால் இப்போது கேப்சூலுக்கு வந்துவிட்டார். இங்கு வாடகை ஆயிரத்து அறுநூறு ரூபாய் மட்டும்தான். இதில் தனிக்கழிவறை கிடையாது. பொதுக் கழிவறையை தான் பயன்படுத்த வேண்டும். (2-6)



அமெரிக்காவில் சனிக்கிழமை வீசிய புயல் காற்றுக்கு மிசிசிப்பி உட்பட பல மாகாணங்கள் பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந்தனர். மூன்று குழந்தைகள் உட்பட 10 பேர் பலியாகியுள்ளனர்.




# சொந்த நாட்டிலேயே சிறுபான்மை மக்களாக மாறும் அவுஸ்திரேலியர்கள்

(மெல்பேர்ன்)

இன்னும் 15 ஆண்டுகளில் அவுஸ்திரேலிய மக்கள், அவர்கள் சொந்த நாட்டிலேயே சிறுபான்மை மக்களாக வசிக்கக்கூடிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து குடியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் "டெய்லி டெலகிராப்" என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள ஆய்வுத் தகவல், அந் நாட்டு மக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வெளிநாடுகளில் இருந்து வந்து, அவுஸ்திரேலியாவில் குடியேறுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, இந்தியா, சீனா போன்ற நாடுகளில் இருந்து, அளவுக்கு அதிகமானோர் அவுஸ்திரேலியாவில் குடியேறுகின்றனர். இந்த நிலை நீடித்தால், இன்னும் 15 ஆண்டுகளில் அவுஸ்திரேலிய மக்கள், அவர்களது சொந்த நாட்டிலேயே சிறுபான்மை மக்களாக மாறிப் போகும் பரிதாப நிலை ஏற்படும்.

இந்தியாவில் இருந்து குடியேறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அவுஸ்திரேலியாவில் அவர்களின் மக்கள் தொகை பல மடங்கு அதிகரிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும். அவுஸ்திரேலியாவில் தற்போதுள்ள மக்கள் தொகை நிலவரப்படி, பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் 14.2 சதவீதமும், நியூசிலாந்து நாட்டினர் 11.4 சதவீதமும், இந்தியாவைச் சேர்ந்தவர்கள் 11.2 சதவீதமும், சீனா நாட்டினர் 10 சதவீதம் பேரும் வசிக்கின்றனர். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற ஜனநாயகம் இன்று கேலிக்குரியதாக மாறியுள்ளது

## ஜே.வி.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

சமல் ராஜபக்ஷவை சபாநாயகராக நியமிப்பதற்கு அரசாங்கம் முன்மொழிந்த யோசனையை வழிமொழிந்ததன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்திற்குள்ளும் ராஜபக்ஷ நிறுவனத்தை உருவாக்க உதவியிருப்பதாக ஜே.வி.பி.யின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சகோதர நிறுவனம், குடும்பக் கூட்டுத்தாபனம் என கடந்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் அரசாங்கத்தின் மீது கடுமையாக குற்றஞ் சுமத்திய ஐக்கிய தேசியக் கட்சி, சமல் ராஜபக்ஷவை சபாநாயகர் பதவிக்கு வழிமொழிந்ததன் மூலம் ஜனநாயகத்தை நல்ல திசையை நோக்கி கொண்டுசெல்லும் பொறுப்பை கைவிட்டுள்ளது.

நாடாளுமன்ற ஜனநாயகம் தற்போது பாரதூரமான சிக்கலுக்குள்ளாகியுள்ளது. பெயரளவில் இயங்கி வரும் நாடாளுமன்ற ஜனநாயகம் இன்று கேலிக்குரியதாக மாறியுள்ளது எனவும் ரில்வின் சில்வா கூறியுள்ளார். (2-6)

# உயர்கல்வி அமைச்சராக எஸ்.பி நியமிக்கப்படக்கூடிய சாத்தியம்



(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சராக எஸ்.பி. திஸாநாயக்க நியமிக்கப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட இவர் ஒரு இலட்சத்திற்கும் மேலதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

தொழிற்பயிற்சி, தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானம் போன்ற துறைகளும் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு வழங்கப்படவுள்ள அமைச்சின் கீழ் கண்காணிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் நாவலப்பிட்டியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டதன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் கருணாஜீவ என்பவரினால் இந்த சம்பவம் குறித்த விசாரணைகள் நடத்தப்படுகின்றன. (2-6)

# இறைவரித் திணைக்களம் மீண்டும் சொந்தக் கட்டிடத்தில் இயங்கவுள்ளது

கொழும்பு கோட்டை பகுதியில் விடுதலைப் புலிகளின் வான் தாக்குதலால் சேதமடைந்த உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சகல நடவடிக்கைகளும் மீண்டும் அந்த திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தில் முன்னெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருட காலமாக திணைக்களத்தின் பணிகள் வெவ்வேறு மூன்று இடங்களில் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் தாக்குதலால் கடந்த வருடம் இந்த கட்டிடம் சேதமடைந்தது.

இந்த தாக்குதலின் போது நாற்பதுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள் என்ற தகவலும் வெளியாகியிருந்தன.

அதன்பின்னர் தற்போது புனர்நிர்மாண நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதன் நடவடிக்கைகளை மீண்டும் அதே கட்டிடத்தில் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. (2-6)

# குவைத்தில் நடைபெறவிருந்த இலங்கை கலாசார விழா கைவிடப்பட்டது

குவைத்தில் இலங்கை சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மாபெரும் கலாசார விழா அந்நாட்டவர்களின் தலையீட்டினை அடுத்து இறுதி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளது.

ஆண்களும் பெண்களும் ஒரே மேடையில் தோன்றி அதுவும் வெள்ளிக்கிழமையன்று ஆடிப்பாடுவது இஸ்லாமிய விதிகளை மீறும் செயலெனக் கூறியே நிகழ்ச்சியை நடத்தவிடாமல் அந்நாட்டவர்கள் தடுத்துள்ளனர்.

பிரதான விழா நிகழ்ச்சிகள் நேற்று தொடங்க இருந்த போதிலும் விழா ஏற்பாடுகள் கடந்த வெள்ளிக்கிழமையே ஆரம்பமாகின.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் பொலிஸாரும் ஆத்திரமடைந்து காணப்பட்ட குவைத் வாசிகளை சமரசம் செய்து வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்தன.

இலங்கையர்கள் இவ்விழாவை நடத்துவதற்குத் தேவையான அனுமதியை முன்கூட்டியே பெற்றிருந்தார்கள் என்றும் அவர்கள் எவ்வகையிலும் சட்டத்தை மீறவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகியவற்றின் இணை அனுசரணையுடன் குவைத் கலை, கலாசார தேசிய பேரவை ஒழுங்கு செய்த மேற்படி இலங்கை கலாசார வாரத்திற்கான ஏற்பாடுகள் குவைத்தின் ஜஹ்ரா மைதானத்தில் ஆரம்பமானதும் அந் நாட்டவர்கள் மைதானத்திற்குள் புகுந்து விழாவை இரத்து செய்யுமாறும் தவறினால் குழப்பம் விளைவிக்கப் போவதாகவும் ஏற்பாட்டாளர்களை அச்சுறுத்தினார்கள்.

இதனால் விழாவிற்கு சென்றிருந்த குவைத்திற்கான இலங்கை தூதுவர் கே.எஸ்.சி திஸ்ஸநாயக்க உட்பட்ட ஐயாயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் மைதானத்தை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தூதுவர் திஸ்ஸநாயக்க பிரச்சினையை தீவிரமடையவிடாமல் முடித்துவைக்கும் முயற்சியில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் முன்னதாகவே அவற்றை இரத்து செய்துவிட்டு மைதானத்திலிருந்து வெளியேறி விடுமாறு விழாவுக்கு சென்றிருந்த இலங்கையர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் இருபத்தெட்டு கலைஞர்களைக் கொண்ட கலாசார குழு ஒன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் சமகால கலை நிகழ்ச்சிகளை நடத்த இருந்தது.

மேலும், சுற்றுலா பயணிகளை கவரும் இலங்கை உற்பத்திப் பொருட்கள் இடம்பெறும் கைப்பணிக் கண்காட்சி ஒன்றும் விழாவின்போது நடத்தப்பட ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பித்தளைப் பொருட்கள், முகமூடிகள், இரத்தினக் கற்கள் மற்றும் அலங்கார பொருட்கள் ஆகியனவும் கண்காட்சியில் இடம்பெற இருந்தன.

குவைத் நாட்டவர்களுக்கு இலங்கை உணவு வகைகளை சமைக்கும் முறைகளை அறிமுகம் செய்வதற்கான செயல்முறைக் காட்சி ஒன்றும் இதில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (2-6)

# லண்டன் தொழில்கட்சிக்கு எதிராக இலங்கை அரசாங்கம் சூழ்ச்சி

## அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரித்தானியாவின் லண்டனை தளமாக கொண்ட தொழில் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் முன் வைத்துள்ளனர்.

இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் நிலையிலேயே தொழில் கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுப்பதாகவும் இவ்வாறான பல முயற்சிகள் ஏற்கனவே முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டதாகவும் இதற்கு பிரித்தானிய வெளி விவகார பேச்சாளர் லியாம் பொக்ஸிம் ஆதரவாக இருந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் போது இலங்கையின் உயர் ஸ்தானிகரத்தினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டு பிரித்தானிய கன்சிவேர்டிவ் கட்சிக்கு ஆதரவளிக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் பெரும்பாலான பகுதிகளில் தமிழ் வாக்குகள் முக்கியமானதாக கருதப்படுகிறது. இந்த நிலையில் தமிழர்களுக்கு ஆதரவாக பல கட்சிகள் பேசி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

## மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி வலய மெய்வன்மை போட்டி எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிக்கு யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)









யாழ். பிராந்திய மலேரியா தடைப்பகுதியினால் நடத்தப்பட்ட உலக மலேரியா தின நிகழ்வு நேற்று முன்தினம் மாலை யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன், உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகர் வைத்திய கலாநிதி என். சிவராஜா ஆகியோர் உரைநிகழ்த்துவதனையும் மலேரியா தினத்தை முன்னிட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் டுசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காக்கிளியர்' கருவி பொருத்தி

# பிறவியிலேயே காது கேளாத சிறுமிக்கு அறுவைச்சிகிச்சை

(சென்னை)

தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டினத்தை சேர்ந்தவர் முத்து கிருஷ்ணன். மீன்பிடி தொழிலாளி. இவருடைய மனைவி லட்சுமி. இவர்களுக்கு ஒரு மகன், 2 மகள்கள். இரண்டாவது மகள் காவ்யதர்ஷனிக்கு 2 வயது ஆகியும் பேச்சு வரவில்லை. சொல்வதும் சிறுமிக்கு புரியவில்லை. பயந்து போன பெற்றோர், காவ்யதர்ஷினியை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

## பாரதச் செய்திகள்

டாக்டர்கள் பரிசோதனை செய்து சிறுமிக்கு பிறவியிலேயே செவித்திறன் குறை ஏற்பட்டுள்ளது. அதனால் காது கேட்க மற்றும் வாய்பேச முடியவில்லை என்று கூறியுள்ளனர்.

இதையடுத்து ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள சென்னை இஎன்டி ஆய்வு அறக்கட்டளை மருத்துவமனையில் சிறுமியை சேர்த்தனர். அங்கு டாக்டர் மோகன் காமேஸ்வரன் தலைமையிலான குழுவினர், காவ்ய தர்ஷினி காது பகுதியில் 'காக்ளியர்' என்ற நவீன கருவியை பொருத்தி அறுவை சிகிச்சை செய்தனர்.

இதுகுறித்து டாக்டர் மோகன் காமேஸ்வரன் கூறியதாவது,

சிறுமியின் குடும்பம் ஏழ்மையானது. கலைஞர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் சிறுமிக்கு நவீன அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இதற்கு ரூ. 6 இலட்சம் செலவாகும். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ரூ. 2 இலட்சத்தை ஸ்டார் ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனம் வழங்கியது. அறுவை சிகிச்சை செலவு டாக்டர்கள் கட்டணத்தை அறக்கட்டளை தள்ளுபடி செய்தது.

மீதம் கட்ட வேண்டிய தொகைக்கு நாங்களே வங்கிகளில் கடன் வசதி செய்து கொடுத்துள்ளோம்.

சிறுமி நலமாக இருக்கிறாள். அறுவை சிகிச்சை முடிந்த 20 நாட்கள் கழித்து 'காக்ளியர்' கருவியின் செயல்பாட்டை தொடங்கி வைப்போம். அன்று முதல் காது கேட்க தொடங்கும். படிப்படியாக பேசவும் ஆரம்பித்து விடுவாள்.

இவ்வாறு டாக்டர் மோகன் காமேஸ்வரன் கூறினார். (2-6)

# பிரபகாரன் தாயார் விவகாரத்தை அரசியலாக்க சிலர் முயற்சி

## தங்கபாலு புகார்



பிரபாகரன் தாயார் விவகாரத்தை சிலர் அரசியலாக்க முயற்சி செய்கின்றனர் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு புகார் கூறியுள்ளார்.

கோவையில் நடைபெற்ற அக்கட்சியின் விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர்,

சட்டப்பேரவையிலும், நாடாளுமன்றத்திலும் முக்கிய பிரச்சினைகளை விவாதிக்க முடியாத எதிர்க்கட்சிகள் நடத்தும் பொது வேலை நிறுத்தம் உண்மைக்கும் மக்களுக்கும் எதிரானது.

சம்பந்தம் இல்லாத பிரச்சினைகளை முன் வைத்து மக்களுக்கு தொந்தரவு செய்கிற, அரசுகளுக்கு தொல்லைகொடுக்கிற ஒரு நிகழ்வாக இந்த வேலை நிறுத்தத்தை அறிவித்திருக்கிறார்களே தவிர, இந்த வேலை நிறுத்தம் பொதுமக்களுக்கு எதிரானது.

அரசியல் மற்றும் கொள்கை ரீதியாக காங்கிரஸ் கட்சியை எதிர் கொள்ள முடியாத எதிர்க் கட்சிகள் அறிவித்துள்ள பொது வேலைநிறுத்தத்தை பொது மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் தாயார் பார்வதி அம்மாள் அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு மத்திய, மாநில அரசுகளை அனுமதி கேட்கவில்லை.

செம்மொழி மாநாடு நடைபெற உள்ள நேரத்தில் இந்த விவகாரத்தை சிலர் அரசியலாக்க முயற்சி செய்கின்றனர் என்றார்.(2-6)

# பிரபாகரன் தாயாரை அனுப்ப யார் காரணம்?

## தொல். திருமாவளவன் கேள்வி



சென்னை பெரியார் திடலில் பிரபாகரன் தாயாரை திருப்பி அனுப்ப காரணம் யார் என்ற பெயரில் சிறப்பு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. விழாவிற்கு வழக்கறிஞர் சாமிதுரை தலைமை தாங்கினார்.

இந்த விழாவில் திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி, திராவிடர் இயக்க தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீர பாண்டியன், திராவிடர் கழக பொது செயலாளர் கலிபூங்குன்றன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் பேசுகையில்,

பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் கடந்த 16 ஆம் திகதி இரவு மலேசியாவில் இருந்து சிகிச்சைக்காக சென்னைக்கு அழைத்து வரப்பட்டார். அப்போது சென்னை விமான நிலையத்தில் அவரை இறங்க அனுமதிக்காமல் தடுத்து அதே விமானத்தில் மலேசியாவுக்கு இந்திய குடியுரிமை அதிகாரிகள் திருப்பி அனுப்பி விட்டனர்.

இந்திய குடியுரிமை அதிகாரிகள் இவ்வாறு நடந்து கொண்டதற்கு கடந்த 2003 ஆம் ஆண்டு இந்திய அரசு வெளியிட்ட தடை ஆணையே காரணம் என்பது தெரியவருகிறது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை அடுத்து பலரும் ஈழத்திற்கு திரும்பினர். அதே போல பிரபாகரனின் பெற்றோரும் தாயகம் திரும்பினர்.

அப்போது தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா பிரபாகரனின் பெற்றோர் தமிழகத்திற்கு வர தடை விதிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருந்தார். அதன் அடிப்படையில் அப்போதைய பாரதிய ஜனதாக் கட்சி மத்திய அரசு, அவர்கள் தமிழகத்திற்கு வர தடை விதித்து அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது.


அந்ததடையின் அடிப்படையில் தான் பார்வதி அம்மாள் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்.

அதாவது, பார்வதி அம்மாளை திருப்பி அனுப்புவதற்கு அப்போதைய அ.தி.மு.க. அரசு பெற்ற தடையாணைதான் காரணம். எனினும் அதனை காரணம் காட்டி அவரை இங்கு மருத்துவம் செய்ய விடாமல் திருப்பி அனுப்பிய நடவடிக்கை மிகவும் கண்டனத் துக்குரியது. இந்த செயலை மனித நேயம் உள்ள எவராலும் சகித்துக் கொள்ள முடியாது.

முதல்வருக்கு நெருக்கமான திராவிடர் கழக தலைவர் வீரமணி போன்றவர்கள் முதலமைச்சர் கருணாநிதியை வலியுறுத்தி பிரபாகரனின் தாயாரை மீண்டும் தமிழகத்திற்கு கொண்டு வந்து சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி உறுதுணையாக இருக்கும். பார்வதி அம்மாளை திருப்பி அனுப்ப காரணமானவர்களை தமிழ் சமுதாயம் ஒரு போதும் மன்னிக்காது என்றார். (2-6)

# பட்டினியின் கொடுமையால் பூக்களை உண்டு உயிர்வாழும் பழங்குடியினர்



(லக்னோ)

இந்திய உத்தரப் பிரதேசத்தில் நானூறுக்கும் மேற்பட்ட பழங்குடியின குடும்பத்தினர் சாப்பிடுவதற்கு போதிய உணவு இன்றி பசியால் உயிருக்கு போராடும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, உத்தர பிரதேசத்தின் பந்தா மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதி உள்ளது. இங்குள்ள கோப்ரி, அல்மாகன்ச், சவுதாரி கா புர்வா உள்ளிட்ட ஏழு கிராமங்களில் நானூறுக்கும் மேற்பட்ட பழங்குடியின குடும்பத்தினர் வசிக்கின்றனர்.

இவர்கள் மாவேசி மற்றும் கவுண்ட் என்ற பழங்குடி பிரிவைச் சேர்ந்தவர்கள். வனப் பகுதியில் உள்ள மரங்களை வெட்டுவது, அங்கு காணப்படும் 'மாகுயா' எனப்படும் ஒரு வகை மலர்களை பறித்துக் கொண்டு வருவது ஆகியவை தான் இந்த மக்களின் தொழில்.

இவற்றை விற்பனை செய்தாலும், மிக மிகக் குறைந்த அளவு வருவாயே அவர்களுக்கு கிடைக்கும். இந்த பணத்தை வைத்து அவர்களால் ஒருவேளை உணவு கூட சாப்பிட முடியாது.

இதனால் மாகுயா மலர்களை பறித்து வந்து அவற்றை சூரிய ஒளியில் நன்றாக உலர வைத்து அதன்பின் தண்ணீருடன் அந்த மலர்களை கொதிக்க வைத்து சாப்பிடுகின்றனர்.

பெரும்பாலான நேரங்களில் இதுதான் அவர்களின் உணவு. போதிய ஊட்டச்சத்து இல்லாத இந்த உணவை சாப்பிடுவதால் இங்குள்ள குழந்தைகள் ஒட்டிய வயிறுடனும், உலர்ந்து போன கண்களுடனும் பார்ப்பதற்கே பரிதாபமாக காட்சி அளிக்கின்றனர்.

இந்த பகுதியின் அருகில் அங்கன் வாடி மையம் ஒன்று உள்ளது. இங்கு படிக்க வரும் குழந்தைகளுக்கு மதிய உணவும் முன்பு அளிக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இந்த அங்கன்வாடி மையம் நிரந்தரமாக மூடப்பட்டு விட்டது.

மாகுயா பூக்களையே தினமும் உணவாகக் கொடுப்பதால் இங்குள்ள குழந்தைகள் அவற்றை சாப்பிட மறுத்து அழுது அடம் பிடிக்கின்றனர். பசியால் தூக்கம் கூட குழந்தைகளுக்கு வருவது இல்லை.

வேறு வழியின்றி புகையிலையை குழந்தைகளின் மூக்கில் தேய்த்து, மயக்கம் வந்தவுடன் அவர்களை தூங்க வைக்கும் பரிதாப நிலைக்கு பழங்குடியின பெற்றோர் தள்ளப்பட்டுள்ளனர். (2-6)

# சீமான் ஆதரவாளர்கள் அமிதாப்பை நேரில் சந்தித்து கோரிக்கை

கொழும்பில் நடைபெற உள்ள சர்வதேச திரைப்பட விழாவில் கலந்து கொள்ள எதிர்ப்பு தெரிவித்து மும்பையில் நடிகர் அமிதாப் பச்சன் வீட்டை நாம் தமிழர் இயக்கத்தினர் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

கொழும்பில் வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழாவிற்கு பாலிவூட் நடிகர் அமிதாப் பச்சன் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டிருப்பதை எதிர்த்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொது செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ.நெடுமாறன் போன்ற தமிழக தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச திரைப்பட விழாவில் தமிழ் திரைப்படத் துறையைச் சேர்ந்த எவரும் கலந்து கொள்ளக்கூடாது. அதோடு அமிதாப்பச்சன் தனது நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்று அவர்கள் கூறி இருக்கின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலையில் மும்பை ஜுகுவில் உள்ள நடிகர் அமிதாப்பச்சனின் வீட்டை நாம் தமிழர் இயக்கத்தை சேர்ந்தவர்கள் முற்றுகையிட்டு கோஷங்களை எழுப்பினர்.

அப்போது இந்திய திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக்கூடாது. அந்த நிகழ்ச்சிக்கான விளம்பர தூதர் பொறுப்பில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று அமிதாப்பச்சன் வலியுறுத்த வேண்டும்' என்று வலியுறுத்தினர். போராட்டத்தின் போது அமிதாப்பச்சன் வீட்டில் இருந்தார்.

போராட்டம் நடந்து முடிந்த பிறகு நாம் தமிழர் இயக்கத்தை சேர்ந்த சிலர் அவரை சந்தித்து தமிழர்களின் உணர்வை மதித்து நிகழ்ச்சியை புறக்கணிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (2-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? அவனிடத்தில் அதிகாரத்தை கொடு. -பல்கேரியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நான் யாழ்ப்பாணத்தின் பொலிஸ் அத்தியட்சகரானால்...

மாணவப் பருவம் மறப்பதற்குரிய பருவமன்று. நினைவிலும் கனவிலும் பள்ளி வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கப்படுவது சாதாரண விடயம் தான்.

நான் இந்த நாட்டின் ஜனாதிபதியானால்... என்று கற்பனையில் கட்டுரை எழுதிய பழக்கதோஷம் போலும்.

நேற்றிரவு ஆழ்ந்த உறக்கத்தில் ஓர் கடுமையான கனவு. பள்ளி ஒன்றில் மாணவனாக பாடம் படித்துக் கொண்டிருக்கின்றேன்.

தமிழ் ஆசிரியர் கடுப்பேறியவராக வகுப்புக்குள் நுழைகிறார். மாணவர்கள் அமைதி கொள்கின்றனர்.

மாணவர்களின் அமைதியை கலைக்கும் வகையில் கட்டுரைத் தலைப்பொன்றை ஆசிரியர் தந்தார்.

நீங்கள் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் அத்தியட்சகரானால்... என்பதுதான் கட்டுரைத் தலைப்பு.

கட்டுரை எழுதுவது என்றாலே சினம் கொள்ளும் நான், ஆசிரியர் தந்த தலைப்பின் காரணமாக உசார் அடைந்தேன். எழுதுதாள்களை எடுத்து வரையத் தொடங்கினேன்.

பொலிஸ் அலுவலகம் உசார் நிலையில் இருக்கின்றது. தொலைபேசி அழைப்புகள் தொடர்ந்தன.

யாரங்கே! பொலிஸ் இன்ஸ்பெக்டர் அலுவலகத்திற்குள் ஓடிவருகிறார்.

யாழ். குடாநாட்டில் ஏன் இந்தப் பயங்கரம்? இன்ஸ்பெக்டர் முழிக்கின்றார்.

ஓய்... கடத்தல், கற்பழிப்பு, கொலை, கொள்ளை, கிணற்றில் சடலம் என்ன காணும் செய்கிறீர்.

எனது அதட்டல் குண்டு விழுந்தது போல அலுவலகக் கண்ணாடிகளை அதிரவைக்கின்றது.

சேர், நாங்கள் எங்கட தென்பகுதி மக்களின்ர பாதுகாப்பில் மிகவும் கவனமாக இருக்கிறம். நல்லூர் கோவில் வாசலில் பொலிஸ் பாதுகாப்பு, வெளி வீதியில் படையினரின் கட்டுப்பாடு,

அதுபோல எங்கட சனங்கள் எங்கெங்க தங்கியிருக்கினமோ அங்கெல்லாம் பொலிஸாரும் இராணுவத்தினரும் உசார் நிலையில் இருக்கின்றனர்.

இதைவிட... இன்ஸ்பெக்டர் முணுமுணுக்க, என் மேசையில் இருந்த கோப்பு இன்ஸ்பெக்டரின் முகத்தில் பட்டு கீழே விழுந்தது.

திடுக்கிட்ட இன்ஸ்பெக்டர் தன்னை சுதாகரித்துக் கொண்டு, சேர் எங்கட ஆட்களை பாதுகாக்கிறது தானே எங்கட வேலை.

தமிழர் கிணற்றில சடலமாக மிதந்தால் என்ன, கிடங்கில சமாதியாகினால் என்ன, எங்கட சனங்கள் நடுச்சாமத்திலும் பயமில்லாமல் வீதியில் சமைத்துச் சாப்பிடுகினம்.

பைலாப்போட்டு மகிழ்வாக இருக்கினம். இதற்காகத்தானே எங்களை நியமித்தவர்கள்... இன்ஸ்பெக்டர் பச்சையாகச் சொல்ல,

எனக்கு கோபம் உச்சமேற, இருந்த சுழல்கதிரை சுவரினில் மோத, எங்கே... நான் போட்ட சத்தத்தில் கிளாக் ஓடிவர பொறுப்பற்ற பொலிஸாரின் பெயர்களுக்கு நேரே இடமாற்றம்.

சந்தேகத்திற்கு இடமான வாகனங்களை சோதனையிடுமாறு குடாநாட்டு படைத்தளபதிக்கு கடிதம்.

யாழ்ப்பாணத்தில் கடத்தல் அதிகரித்துள்ளதால் அதனைக் கட்டுப்படுத்தும் வரை தென்பகுதி மக்களின் யாழ்ப்பாண வருகையை தடுத்து நிறுத்துமாறு பாதுகாப்பு செயலருக்கு தொலைநகல்.

பொலிஸாரின் இரவு நேர ரோந்துக்கு உத்தரவு. யாழ். மாவட்ட நீதிபதிகளைச் சந்தித்து சட்டம் சீர் குலைந்துள்ளதைச் சுட்டிக் காட்டுதல், யாழ். அரச அதிபர் தலைமையில் அவசர மாநாடு.

சந்தியில் நின்று சேட்டை புரிவோர் கைது. சாராயக் கடைகளுக்கு எச்சரிக்கை. இப்படியே அதிரடி நடவடிக்கை.

மறுநாள் பத்திரிகைகளில் கடத்தல் முறியடிப்பு, கொலை, கொள்ளை முற்றாக ஒழிப்பு என்ற செய்திகள்.

கூடவே பொலிஸ் அத்தியட்சகர் வாழ்க... வாழ்க... என்ற பொதுமக்களின் கோஷம்.

அந்தக் கோஷசத்தில் என் நித்திரை முறிய, கண்டதெல்லாம் கனவு. இது நினைவாகாதோ என்ற ஏக்கத்தில் மீண்டும் நாம்.

# கிழக்கு மாகாண சபையை விசாரித்து அதனைக் கலைக்க அரசு திட்டம்?

(கொழும்பு)

கிழக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள உள்ளூராட்சி சபைகளில் இடம்பெற்றுள்ளவை எனக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள் தொடர்பாக அரசு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜயவிக்கிரம இதனை உறுதி செய்துள்ளார்.

பிள்ளையான் நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்தமையால் மக்களிடம் பிள்ளையானுக்கு செல்வாக்கு இல்லை என்பதை அரசு புரிந்து கொண்டுள்ளது. ஆகவே விசாரணை செய்து மாகாண சபையினை கலைப்பதன் மூலம் பிள்ளையானை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

நிதி முறைகேடு, அரச வாகனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை, சட்ட விரோத நியமனங்கள் போன்ற குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்தே இந்த விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. கணக்காய்வு விசாரணையும் இடம்பெறுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சில குறித்தும் அரசு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. தென் கொரியாவிற்கு அனுப்புவதாக சுமார் ஆயிரம் பேரிடம் பணம் வசூலித்த பின்னர் அவர்களை அந்த நாட்டிற்கு அனுப்பாமை, கணனி கொள்வனவில் மோசடி போன்ற குற்றச்சாட்டுக்கள் குறித்தும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என ஆளுநர் தெரிவித்துள்ளார். (ச-5)

# அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் மோசடியாளர்கள்-ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் மோசடியாளர்கள் என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

சுகாதாரம், வர்த்தகம், வெளிவிவகாரம், கல்வி போன்ற துறைகளில் பணியாற்றிய அமைச்சர்கள் மோசடியானவர்கள் எனவும் அவர்கள் வினைத்திறனற்றவர்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டிய போதிலும், அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும்,

ஜனாதிபதி அதனைத் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளமை முக்கியமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் எனவும் கயந்த கருணாதிலக்க கூறியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் பல அமைச்சுப் பதவிகளில் ஜனாதிபதி மாற்றங்களைச் செய்துள்ளார். தமது கட்சி சுட்டிக்காட்டியதன் காரணமாகவே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

புதிய அமைச்சரவை மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்ட போதிலும் அரசாங்கத்திலுள்ளவர்களின் அபிலாசைகள் மாத்திரமே இதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்னர் அமைச்சரவை எண்ணிக்கை 35 ஆக குறைக்கப்படும் என உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. எனினும் தற்போது 37 ஆக அதிகரத்துள்ளது. எதிர்காலத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க இடமுள்ளதாகவும் கயந்த கருணாதிலக்க கூறியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். (ச-5)

# பாடசாலை மாணவர்களுக்குரிய 2ஆம் தவணைக்கான உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டின் இரண்டாம் தவணைக்கான உணவு விநியோகத்தினை மேற்கொள்ளும் பொருட்டு உரிய ப.நோ.கூ சங்கங்களுக்கு களஞ்சியங்களில் இருந்து உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழங்கற் கட்டளைகள் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தினுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவினால் இன்று வழங்கப்படவுள்ளது.

எனவே ப.நோ.கூ. சங்கங்கள் வழங்கற் கட்டளைகளைப் பெற்று எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன் உணவுப்பொருட்களை உரிய பாடசாலைகளிற்கு விநியோகித்து முடிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

மேலும் பாடசாலை அதிபர்கள் உரிய.ப.நோ.கூ சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உணவுப் பொருள் விநியோகத்தை துரிதப்படுத்தி மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கலை சீரான முறையில் மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

03.05.2010க்கு முன்னர் உணவுப் பொருட்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்திலுள்ள உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவின் தொலைபேசி இலக்கம் (021 222 9716) மூலம் தொடர்பு கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

கோப்பாய் உலக உணவுத் திட்ட களஞ்சியத்தில் இருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுவிடுமுறை நாளான நாளை மற்றும் சனி, ஞாயிறு தினங்களிலும் களஞ்சியம் திறந்து வைத்திருக்கப்படும். மேலும் பாடசாலை அதிபர்கள் அத்தினங்களில் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ப.நோ.கூ. சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

## கடாச்சம் மலர்கவே

புத்தேள் பொங்கப் பேரற்புதம் பொங்க
பக்தி பொங்க பரவசம் பொங்க
சித்தியருள் பொங்கச் சீர்வளம் பொங்க
சித்திரச் சிற்ப மணித் தேரினிலே
வித்தகம் பொங்க உற்சவம் காணும்
மாண்மியம் பொங்கும் பஞ்சமுக விநாயகனே
சத்தியம் தர்மம் சமரசம் செழித்து
தரணி பொங்கக் கடாச்சம் மலர்வாயே

**அல்வாயூர் சி.சிவநேசன்**
அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார்
கோவில் இரதோற்சவம் இன்றாகும்

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி அருள்மிகு முருகன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தில் இறுதி நாளான இன்று 10 மணி முதல் சங்காபிஷேகம் இடம்பெறும்.

தொடர்ந்து விசேட பூசைகள், திருவூஞ்சல், சுவாமி வீதியுலா, அன்னதானம் என்பன இடம் பெறும். நாளை புதன் கிழமை சித்திரைக் கஞ்சியும் இடம்பெறவுள்ளது. (ச-3)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


## பல்சுவை



அந்தக் குணங்கள் தாம் , அவர் வாழ்க்கையில் அடைந்த சிறந்த வெற்றிகளுக்குக் காரணங்களாகும். அவர் முற்றிலும் சுயநலம் அற்றவராக இல்லாமலிருக்கலாம். ஆனால் அப்படி இருப்பதற்கிடையிலும் அவர் சுயநலத்தைத் துறந்துவிடும் நிலையை நோக்கிச் சென்று கொண்டிருப்பவராக இருந்திருப்பார்.

அவர் அறவே சுயநலம் இல்லாதவராக இருந்திருப்பாரானால் , அவர் அடைந்த வெற்றி புத்தர்பிரானின் வெற்றியைப் போன்றோ இயேசுநாதரின் வெற்றியைப் போன்றோ ஒரு மாபெரும் வெற்றியாக விளங்கியிருக்கும். சுயநலமற்ற தன்மையின் அளவுதான் , வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தை செல்வநாயகத்தின் 33ஆவது நினைவுநாள் அஞ்சலி நிகழ்வு தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தந்தை செல்வநாயகத்தின் திருவுருவச் சிலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தந்தை செல்வநாயகத்தின் மகன் சந்திரகாசன், தந்தை செல்வநாயகம் நினைவு அறங்காவற் குழுத்தலைவர் அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன் ஆகியோர் மலர்மாலை அணிவிப்பதையும், நினைவுத்தூபிக்கு அஞ்சலி செலுத்துவதையும், வண.பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள், நல்லை ஆதீன முதல்வர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# யாழ்.சிறைக்கைதிகளின் உண்ணாவிரதம் முடிவு

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் விளக்கமறியல் கைதிகள் சிலர் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளது.

சிறைக்கைதிகளுடன் இடம்பெற்ற நேரடிக் கலந்துரையாடலையடுத்து இந்த உண்ணா விரதத்தை கைவிட்டதாகச் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான கெனத் பெர்ணாண்டோ குறிப்பிட்டார்.

தமது பிரச்சினைகள் தொடர்பாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட கைதிகள் எழுத்து மூலம் சமர்ப்பித்த தகவல்கள் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 44பேர் இடமாற்றம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் வடபிரிவுக்கு உட்பட்ட கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 44 உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 44 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடமை தேவையின் அடிப்படையில் குறித்த நபர்கள் இடமாற்றம் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் மொத்தமாக 72 பேர் கடமையாற்றி வருவதாகவும், இதில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பிறப்பித்த உத்தரவுகளை உதாசீனம் செய்த காரணத்தினால் குறித்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படுவதாகவும் இரகசியத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (6)

# கல்விச் சமூகத்தை நல்ல நெறியில் நெறிப்படுத்துவது காலத்தின் தேவையாகும்

## செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்




"நமது வருங்கால இளம் மாணவ சமுதாயம் தற்கால இருள் சூழ்ந்த நிலையில் இருந்து விடுபட்டு ஒளி நிறைந்த சீரிய நெறியில் வாழ்வதற்கு அத்திபாரமாக அமைவது கல்வி, கலை,கலாசார, பண்பாட்டு நெறிகளேயாகும்.

அத்தகையதொரு கல்விச் சமூக த்தை நல்ல நெறியில் வழிப்படுத்துவது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இவ்வாறு வலி கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றத்தின் புதுவருட தினக் கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், " மாணவர்களுக்கு அன்னை சாரதா தேவியார், பாரதியார், மகாத்மாகாந்தி, அரிசந்திர மகாராஜன் போன்றோரின் வாழ்க்கை நெறிகள் உணர்த்தப்படுதல் அவசியம்" என்றார்.

இவ்விழா கோப்பாய் வீரபத்திரர் ஆலய முன்றலில் "கானகதாவாரிதி" பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் ஆசியுரை நல்கிய நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் உரையாற்றுகையில்,

கிராமங்கள் தோறும் இம் மன்றங்கள் இயங்குவதன் மூலம் சமுதாயம் ஆன்மீக எழுச்சி பெறுவதைக் காணமுடியும் எனவும் ஒவ்வொரு கிராமத்தின் வரலாறும் அங்கு பணி செய்த பெரியோர்களின் சேவைகளும் ஆவணப்படுத்தல் அவசியமெனவும் கேட்டுக் கொண்டார்.

கோப்பாய் கிராமத்தைச் சேர்ந்த முன் பள்ளி மாணவர்களுக்கு கௌரவிப்பும், கைவிசேஷமும் மன்றத்தின் சார்பில் ஸ்ரீ சுவாமிகளால் வழங்கப்பட்டது.

கலை நிகழ்வுகளாக பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும், வில்லிசைக் கலைஞர் இராசையா ஸ்ரீதரனின் வில்லிசையும், மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழுவினரின் பட்டிமன்றமும் இடம்பெற்றன. (6)

# கலந்துரையாடல் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த ஆளுநருடனான நிறுவனத்தலைவர்களிற்கான கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். எனவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (6)

# புலமைப்பரிசில் திட்டம் தொடர்பான விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

யப்பானிய பட்டப்படிப்பு தொழிநுட்ப கல்லூரி புலமைப்பரிசில் திட்டம் மற்றும் கியூபன் பட்டப்படிப்பு புலமைப்பரிசில் திட்டம் தொடர்பான விபரங்களை www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியில் பார்வையிடலாம் என உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

'மேலும் இது தொடர்பான விபரங்கள் அனைத்தும் சகல வலயக்கல்விப் பணிமனைகளுக்கும் மேலதிக மாகாணக் கல் விப் பணிப்பாளருக்கும் அறியத்தரப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதி பர் தெரிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். தலைமைப் பதவியிலிருந்து மோடி நீக்கம்
# இடைக்காலத் தலைவராக சிரையூ அமின் நியமனம்

## பி.சி.சி.ஐ. அதிரடி நடவடிக்கை


லலித் மோடி

(மும்பை)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப் பின் இடைக்காலத் தலைவராக சிரையூ அமின் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். அமைப்பில் சுமார் 22 ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ் லலித் மோடி பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்தே மேற்படி தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

மும்பையில் இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை (பி.சி.சி.ஐ) தலைமை அலுவல கத்தில் ஐ.பி.எல். ஆட்சி மன்றக் கூட்டம் நேற் றுக் காலையில் கூடியது.

பி.சி.சி.ஐ. தலைவர் சஷாங் மனோகர், துணைத்தலைவர் அருண் ஜெட்லி, செயலர் சீனிவாசன், செய்தித் தொடர்பாளர் ராஜீவ் சுக்லா, ஐ.பி.எல். உப தலைவர் நிரஞ்சன் ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஐ.பி.எல். முக்கிய ஆவணங்கள் கிடைக்க வில்லை. ஐ.பி.எல். ஒரு முக்கியமான சொத்து. மோடி விவகாரம் கண்காணித்து வரப்படுகி றது. தவிர ஐ.பி.எல். இடைக்காலத் தலை வராக சிரையூ அமின் நியமிக்கப்பட்டுள்ளார்.

ரவிசாஸ்திரி உள்ளிட்ட 3 பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட்டுள் ளது. மீண்டும் பி.சி.சி.ஐ. கூட்டம் யூன் மாதம் நடைபெறும் என பி.சி.சி.ஐ. தலைவர் சஷாங் மனோகர் தெரிவித்தார்.

அத்துடன் மோடியின் இடைக்காலத் தடை உத்தரவினைத் தொடர்ந்து அவர் மீதான விசாரணைகளை மேற்கொள்ள செயற் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட் டார்.

மோடி தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சுமார் ஆறு மாதங்கள் எடுக்கும் எனவும் அக் குழு தெரிவித்துள்ளது.

மோடியின் பதவி தொடர்பில் நடத்தப் படும் வாக்குக் கணக்கெடுப்பில் 4இல் 3 வாக்கு களை பி.சி.சி.ஐ. பெறவேண்டும். இல்லா விடின் மோடியை பதவி நீக்க முடியாது.

இதேவேளை தனது இடைக்கால தடை உத்தரவுக்கு எதிராக நீதிமன்றம் செல்லப் போவதாக மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அமைச்சர் சசிதரூர் பதவி யை இல்லாமல் செய்த ஐ.பி.எல். தலைவர் லலித் மோடியை பதவியிலிருந்து நீக்கிட சட்ட ரீதியான பிரச்சினைகளை எப்படி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கையாளப் போகி றது என்பது தான் தற்போதைய எதிர்பார்ப்பு.


சிரையூ அமின்

## தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் லீக் செப்ரம்பர் 10 முதல் 26 வரை நடக்கும்

இரண்டாவது சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடக்கும் என ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஐ.பி.எல். தொடர் முடிந்தபின் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் நடக்கும். இதில் ஐ.பி.எல். தொட ரில் முதல் மூன்று இடம் பிடித்த அணிகள்,

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக் காவிலிருந்து இரண்டு மற்றும் நியூசிலாந்து, இலங்கை, மேற்கிந்தியத்தீவுகளி லிருந்து தலா ஒரு அணிகள் என மொத்தம் 12 அணிகள் சம்பி யன்ஸ் லீக் இருபது-20 தொடரில் பங்கேற்கும். கடந்த ஆண்டு நடந்த முதல் தொடரில் அவுஸ்தி ரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது.

தற்போது இரண்டாவது தொடர் குறித்து ஐ.பி.எல். வெளியிட்டுள்ள அறிக்கை,

உலக கோப்பை இருபது-20 மற்றும் இரண் டாவது ஐ.பி.எல். தொடரை கிரிக்கெட் தென்னா பிரிக்கா (சி.எஸ்.ஏ) வெற்றிகரமாக நடத்தியுள்ளது தவிர இவ்வகை போட்டி களுக்கு தென்னாபிரிக்கா வில் நல்லவரவேற்பும் உள்ளது. இப்போது இரண் டாவது சம்பியன்ஸ் லீக் தொடரையும் நடத்தவிருப் பம் தெரிவித்தது.

இதனையடுத்து சி.எஸ்.ஏயின் வேண்டு கோள் ஏற்கப்பட்டு இத்தொடர் எதிர்வரும் செப்ரம் பர் 10 முதல் 26ஆம் திகதிவரை தென்னாபிரிக் காவில் நடக்கும்.


இதில் சென்னை, மும்பை, பெங்களூர் தவிர மற்ற அணிகள் மற்றும் போட்டி நடக்கும் இடங் கள் ஆகியவை வரும் வாரத்தில் முடிவு செய்யப் படும் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஐ.பி.எல். 60 போட்டிகளில் 572 சிக்ஸர்கள்; 1685 பவுண்டரிகள்

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப் பின் 8 அணிகள் மோதிய மூன்றாவது இரு பது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடந் தது.

இத் தொடரில் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் மும்பையில் நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி சென்னை சுப்பர் கிங்ஸ் சம்பியனானது.

இந் நிலையில் இத் தொடரில் நடை பெற்ற 60 போட்டிகளில் 572 சிக்ஸர்கள் விளாசப் பட்டுள்ளன.



இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் 97, பெங் களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் 77, டெக்கான் சார்ஜர்ஸ் 84, டில்லி டேர்டேவில்ஸ் 58, மும்பை இந்தியன்ஸ் 70, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 63, ராஜஸ்தான் றோயல்ஸ் 74, கின்ஸ் லெவின் பஞ்ஜாப் 57 சிக்ஸர்கள் அடித்துள் ளன.

அத்துடன் தொடரில் அதிக தூரம் சிக்ஸர் அடித்த வீரர் என்ற பெருமையை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தோனி பெற்றுள் ளார். கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிக்கு எதி ரான போட்டியில் 108 மீற்றர் தூரத்திற்கு பந்தை பறக்கவிட்டுள்ளார். இத் தொடரில் மொத்தம் ஆயிரத்து 685 பவுண்டரிகள் அடிக்கப்பட்டு இருக்கின்றன.

இதில் ஒவ்வொரு அணியும் விரட்டிய பவுண்டரிகளின் எண்ணிக்கை வருமாறு,

சென்னை சுப்பர் கிங்ஸ் - 212, பெங் களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் - 214, டெக்கான் சார்ஜர்ஸ் - 197, டில்லி டேர்டேவில்ஸ் - 190, மும்பை இந்தியன்ஸ் - 249, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - 199, ராஜஸ்தான் றோயல்ஸ் -202, கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் - 233 பவுண் டரிகள் ஆகும்.

## இருபது-20 கிரிக்கெட் உலகக்கிண்ண நேரசூசி

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) நடத் தும் உலகின் 12 நாட்டு அணிகள் மோதும் இருபது-20 கிரிக்கெட் உலகக்கிண்ண தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி மேற்கிந்தியத்தீவு களில் ஆரம்பமாகிறது.

எதிர்வரும்மே16ஆம்திகதிவரைநடைபெறும் இத் தொடரில் விளையாடும் 12 அணிகளும் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் சுற்று ஆட்டத்தில் ஒவ்வொரு அணியும் தனது பிரிவு அணியுடன் ஒரு முறை மோதும்.

இதில் முதல் சுற்று ஆட்ட முடிவில் ஒவ் வொரு பிரிவிலும் புள்ளிகள் அடிப்படையில் இரு அணிகள் சுப்பர்-8 சுற்றுக்கு தெரிவாகும்.

பிரிவு-ஏ: பாகிஸ்தான், பங்களாதேஷ், அவுஸ்திரேலியா.

பிரிவு-பி: இலங்கை, நியூசிலாந்து, சிம்பாவே.

பிரிவு-சி: தென்னாபிரிக்கா, இந்தியா, ஆப்கானிஸ்தான்.

பிரிவு-டி: மேற்கிந்தியத்தீவுகள், இங்கி லாந்து, அயர்லாந்து.

| நாள் | பிரிவு | அணிகள் | இடம் | இலங்கை நேரம் |
|---|---|---|---|---|
| ஏப் 30 | பி | நியூசிலாந்து-இலங்கை | கயானா | இரவு 10.30 மணிக்கு |
| ஏப் 30 | டி | மேற்கிந்தியத்தீவுகள்-அயர்லாந்து | கயானா | இரவு 2.30 மணிக்கு |
| மே 1 | சி | ஆப்கானிஸ்தான்-இந்தியா | செயின்ட் லூசியா | இரவு 7.00 மணிக்கு |
| மே 1 | ஏ | பங்களாதேஷ்-பாகிஸ்தான் | செயின்ட் லூசியா | இரவு 11.00 மணிக்கு |
| மே 2 | சி | இந்தியா-தென்னாபிரிக்கா | செயின்ட் லூசியா | இரவு 7.00 மணிக்கு |
| மே 2 | ஏ | அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் | செயின்ட் லூசியா | இரவு 11.00 மணிக்கு |
| மே 3 | பி | இலங்கை-சிம்பாவே | கயானா | இரவு 7.00 மணிக்கு |
| மே 3 | டி | மேற்கிந்தியத்தீவுகள்-இங்கிலாந்து | கயானா | இரவு 11.00 மணிக்கு |
| மே 4 | பி | நியூசிலாந்து-சிம்பாவே | கயானா | இரவு 7.00 மணிக்கு |
| மே 4 | டி | இங்கிலாந்து-அயர்லாந்து | கயானா | இரவு 11.00 மணிக்கு |
| மே 5 | ஏ | அவுஸ்திரேலியா-பங்களாதேஷ் | பார்படோஸ் | இரவு 7.00 மணிக்கு |
| மே 5 | சி | ஆப்கானிஸ்தான்-தென்னாபிரிக்கா | பார்ப்படோஸ் | இரவு 11.00 மணிக்கு |
| மே 6 | - | ஏ1-டி2 | பார்ப்படோஸ் | இரவு 7.00 மணிக்கு |
| மே 6 | - | சி1-பி2 | பார்ப்படோஸ் | இரவு 11.00 மணிக்கு |
| மே 7 | - | ஏ2-சி2 | பார்ப்படோஸ் | இரவு 7.00 மணிக்கு |
| மே 7 | - | பி1-டி1 | பார்ப்படோஸ் | இரவு 11.00 மணிக்கு |
| மே 8 | - | சி1-டி2 | பார்ப்படோஸ் | இரவு 7.00 மணிக்கு |
| மே 8 | - | ஏ1-பி2 | பார்ப்படோஸ் | இரவு 11.00 மணிக்கு |
| மே 9 | - | சி2-டி1 | பார்ப்படோஸ் | இரவு 7.00 மணிக்கு |
| மே 9 | - | பி1-ஏ2 | பார்ப்படோஸ் | இரவு 11.00 மணிக்கு |
| மே 10 | - | பி2-டி2 | செயின்ட் லூசியா | இரவு 7.00 மணிக்கு |
| மே 10 | - | ஏ1-சி1 | செயின்ட் லூசியா | இரவு 11.00 மணிக்கு |
| மே 11 | - | பி1-சி2 | செயின்ட் லூசியா | இரவு 10.30 மணிக்கு |
| மே 11 | - | டி1-ஏ2 | செயின்ட் லூசியா | இரவு 2.30 மணிக்கு |
| மே 13 | - | முதல் அரையிறுதி | செயின்ட் லூசியா | இரவு 9.00 மணிக்கு |
| மே 14 | - | இரண்டாவது அரையிறுதி | செயின்ட் லூசியா | [illegible] மணிக்கு |
| மே 16 | - | பைனல் | பார்ப்படோஸ் | இரவு 9.00 மணிக்கு |

## கொக்குவில் இந்து பழையமாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாண வர்களிற்கிடையில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல் லூரி மைதானத்தில் கிரிக்கெட் நடைபெறவுள் ளது.

இதனால் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் அணி வீரர்களை இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமை யும் மாலை வேளைகளில் பயிற்சியில் ஈடுபட வருமாறு கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் கிரிக்கெட் அணி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

எமது ஆசிரியர் திரு.நா.சண்முகானந்தன்
அவர்களின் அன்பு மாமனார்

## சின்னத்தம்பி அருளம்பலம்



அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி

(இ)

வலம்புரிக் குடும்பம்

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி அருளம்பலம்

(அல்லைப்பிட்டி)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வாழ்ந்தவருமான சின்னத்தம்பி அருளம்பலம் ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம், சிவகாமி ஆகியோரின் சகோதரனும், வனஜா (இளைப்பாறிய அதிபர்), வசந்தா (லண்டன்), சிறிகாந்தன் (லண்டன்), ஜெயகாந்தன் (லண்டன்), ஜெயவாணி (லண்டன்) ஆகியோரின் தந்தையும், சண்முகானந்தன் (ஆசிரியர்-வலம்புரி, இளைப்பாறிய நில அளவைப் படவரைஞர்), செல்வநாயகம் (சட்டத்தரணி-லண்டன்), கிரிஜா (லண்டன்), கிருபா (லண்டன்), சிவபாதசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ஆர்த்தி, திவ்யா, அருண், அர்ச்சனா, பிரணவன், பிரவீனன், பிருந்தா ஆகியோரின் பேரனும், அன்னசோதி (இளைப்பாறிய ஆசிரியை), தங்கம் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (27.04.2010) பி.ப. 1.00 மணிக்கு நடைபெற்று பி.ப. 4.00 மணி அளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இல.18, 4/2, பரகும்பா பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
011 2367589

தகவல்:
அ.சிறிகாந்தன் (மகன்-அல்லை சிறி)
நா.சண்முகானந்தன் (மருமகன்)

(இ)

## அரியகுட்டி அரியரத்தினம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி அரியரத்தினம் அவர்கள் 26.04.2010 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி நல்லம்மா தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், சசிதரன், சேகரன், பகீரதன், பகீரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்சினியின் அன்பு மாமானாரும் கீர்த்தினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் 27.04.2010 இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
077 6106220

தகவல்:
பிள்ளைகள்.

(1272)

# 36 அமைச்சின் செயலாளர்களில் ஒரேயொருவரே சிறுபான்மையினர்

## தமிழ்த் தலைமைகள் கவலை வெளியீடு

(கொழும்பு)

36 அமைச்சின் செயலாளர்களில் ஒரே ஒருவரே சிறுபான்மையினத்தவர் என தமிழ்த் தலைமைகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புதிய அமைச்சுக்களின் செயலாளர்கள் நியமனம் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது. ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் 36 அமைச்சுக்களின் செயலாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் செயலாளர்களில் ஒரேயொருவர் சிறுபான்மையினத்தவர் ஆவார். இவர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கும் நியமிக்கப்பட்டுள்ள மொரீனா மூக்மட் ஆவார்.

முதல் முஸ்லிம் பெண் அமைச்சு செயலாளர் என்ற பெருமை இவரையே சாரும். இதற்கு முன்னர் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

அமைச்சின் செயலாளர்களாக வரக்கூடிய கல்வித் தகைமைகள் உடைய தமிழ் மக்கள் உள்ள போதும் எவரும் செயலாளர்களாக நியமிக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ச-5)

## பொன்சேகாவை உளவு பார்த்த டலஸ்

தியவன்னா உணவு விடுதியில் பொன்சேகா தேநீர் அருந்தும் வேளையில் அவரை டலஸ் அழகப்பெரும மறைந்திருந்து உன்னிப்பாக அவதானித்ததாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் உளவுப் பிரிவினரால் இந்தப் பணியை மேற்கொள்ள முடியாததனால்தான் அதனை அமைச்சர் ஒருவர் மேற்கொண்டதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பிரதமர் ஜயரட்ண கண்டிக்கு விஜயம்

பிரதமர் டி.எம்.ஜயரட்ண கண்டியின் பல்வேறு மத வழிபாட்டுத் தலங்களுக்கு நேற்று விஜயம் செய்து ஆசி பெற்றுக் கொண்டார். கண்டிக்கு விஜயம் செய்த பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதற்கு முன்னர் கடுகண்ணாவ பிரதேசத்தில் வைத்து நீதியமைச்சர் அதாவுட செனவிரட்ன, எஸ்.பி.திஸநாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக்க மற்றும் மத்திய மாகாண ஆளுநர் ரிக்கிசி கொப்பேக்கடுவ ஆகியோர் பிரதமரை வரவேற்று அழைத்து வரச் சென்றனர். (ச-3)

## 'சிறுமி கடத்தப்பட்டார்' என்ற...

காப்பை மேற்கொண்டனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் உடனடியாகத் தமக்கு அறிவிக்குமாறு அறிவித்தனர்.

இவ்வாறாக நேற்று வலிகாமம் பகுதி அல்லோலகல்லோலப்பட்டது. இதேவேளை பாடசாலைக்குத் தனியாகச் சென்ற சிறுமி ஒருத்தி, வெள்ளை வான் ஒன்று மெதுவாகச் சென்றதையடுத்து பதறியடித்து ஓடியதாகவும் இச் சம்பவமே சிறுமி கடத்தப்பட்டதாக வதந்தியாகப் பரவியதாகவும் பின்னர் தெரிய வந்ததாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை இணுவில், இளவாலை, ஏழாலை போன்ற இடங்களிலும் சிறுவர்களைக் கடத்தும் முயற்சிகள் இடம்பெற்றதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும் இச் செய்திகள் உண்மையா? இல்லையா? என்பது குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை. (ச-5)

## 75 இலங்கை...

காவலில் வைத்துள்ளனர்.

இந்த படகில் ஆறு பெண்களும் எட்டு சிறுவர், சிறுமியரும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கடுமையாக நோய்வாய்ப்பாட்ட இருவரும் குறித்த படகில் பயணித்துள்ளதாக மலேசிய அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க அனுமதிக்காவிட்டால் தற்கொலை செய்யப் போவதாகப் பயணிகள் எச்சரிக்கை விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இலங்கைப் படகுப் பயணிகள் தற்போது தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. (ச-5)

## விடுதலைப்...

ஒன்றியம் 2006 ஆம் ஆண்டு பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்தது.

நெதர்லாந்து நாட்டின் தேசிய குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் நடத்தப்பட்ட விசாரணைகளில் விடுதலைப்புலிகளுக்காக நிதிகள் சேகரிக்கப்பட்டமை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் 2002 ஆம் ஆண்டின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் படி அப்படியான அமைப்புகளுக்கு நிதி மற்றும் பொருளாதார ஆதரவு வழங்குவது சட்டப்படி பொருளாதாரக் குற்றமாகக் கருதப்படும்.

மேலும் இந்த விசாரணைகளில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா? என்பது குறித்தும் ஆராயப்படுகின்றது. (ச-5)

## ஜி-15 நாடுகளின் தலைமைப்...

ஜி-15 நாடுகளின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்குக் கிடைக்கப் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி ஈரானிய தலைநகர் தெஹ்ரானில் ஜி-15 நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ளதாகவும் இதன்போது ஈரானிய ஜனாதிபதி அஹமட் நிஜாட்டுடன் இலங்கை ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டு நாள் நடைபெறவுள்ள மாநாட்டின் போது தலைமைப் பதவி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பில் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 17 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

தெஹ்ரான் மாநாட்டின் போது இலங்கையின் சார்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

A/L 2012
புவியியல் மாணவர்களுக்கு
தேர்ச்சி இல 01 இல் இருந்து
ஆரம்பம் 01.05.2010
சனிக்கிழமை
புவியியல்
பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் :- பிரிவு I - 11.00 பிரிவு II - 12.00
இணுவில் :- 6.15 மு.ப
P.S குமரன்

Network Engineer
Government Scholarship
System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
*Carrier Guidance, Student Visa, Work Permit
செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்
Per Module - 15000/= 3800/=
Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
Free Diploma in Hardware Technology-DHT, INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL
இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை மட்டுமே
MCS Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம்
T.P-772395895

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org